2026 தமிழ்நாடு சட்டப்பேரவை

17வது பொதுத் தேர்தலுக்கான

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# தேர்தல் அறிக்கை




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ்நாடு மாநிலக்குழு

43, செவாலியே சிவாஜிகணேசன் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

2026, தமிழ்நாடு சட்டப்பேரவை 17வது பொதுத் தேர்தலுக்கான

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# தேர்தல் அறிக்கை

## 2026, தமிழ்நாடு சட்டப்பேரவை 17வது பொதுத் தேர்தலுக்கான

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான 17வது பொது தேர்தலின் வாக்குப்பதிவு 2026 ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கிறது. ஏற்கனவே வாக்காளர் சிறப்பு சீர்திருத்தம் என்ற பெயரில், தமிழ்நாட்டின் வாக்காளர்கள் 76 லட்சம் பேரை, வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் நீக்கி இருக்கிறது. ஏற்கனவே வரைவு பட்டியலில் 97 லட்சம் பேர் நீக்கப்பட்ட நிலையில், விடுபட்டவர்கள் மீண்டும் விண்ணப்பித்துள்ளனர். யார் விண்ணப்பித்தார்கள், யார் யார் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், எந்தெந்த வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அதன் மீது உரிய நடவடிக்கைகளை வாக்காளர்கள் மேற்கொள்வதற்கு எந்த கால அவகாசமும் இன்றி, தேர்தல் நடைமுறைகள் துவங்கி விட்டன.

### ஆர்எஸ்எஸ் – பாஜக ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயல்பாடுகள்

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வாக்குத் திருட்டு உட்பட பல்வேறு முறைகேடுகளைச் செய்த பின்னும் கூட, பாஜக அறுபத்து மூன்று தொகுதிகளை இழந்தது, ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெற இயலவில்லை. தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட சந்தர்ப்பவாத கட்சிகளின் ஆதரவைப் பெற்று கூட்டணி ஆட்சி அமைத்திருக்கிறது. ஆனால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கும், மதச்சார்பற்ற, வேற்றுமையில் ஒற்றுமை பேணும் மரபுக்கும் எதிரான இந்துத்துவ பாசிச கொள்கையை முழுமூச்சாக அமலாக்கிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர் உரிமைகளை பறிக்க, நூறாண்டுகள் போராடிப் பெற்ற 44 சட்டங்களை நீக்கிவிட்டு, நான்கு சட்ட தொகுப்புகளாக சுருக்கி செயல்படுத்த முயற்சிக்கிறது. விவசாய நிலங்களை குழும நிறுவனங்களுக்கு கை மாற்றுகிற, விவசாயிகளுக்கு விரோதமான வேளாண் சட்டங்களைத் திரும்ப பெற்றாலும், அவற்றின் நோக்கங்களை பல வடிவங்களில் செயல்படுத்துகிறது.

விவசாயிகளுக்கு தந்த வாக்குறுதி எதனையும் நிறைவேற்ற மறுத்து வருகிறது.

கடும் வேலையின்மை தலைவிரித்தாடுகிறது. பெண்களை இழிவு செய்யும், சனாதனக் கருத்தியலுக்கு ஏற்ப, பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரிப்பதைத் தூண்டுகிறது. பணமதிப்பிழப்பு மற்றும் தன்னிச்சையான ஜிஎஸ்டி வரிவிதிப்பு மூலம் சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை அழித்து, பன்னாட்டுப் பெரும் குழும நிறுவனங்களின் ஏகபோகம் வளரத் துணை செய்கிறது. சிறு வணிகர்களைப் புறக்கணித்து, பெரு நிறுவனங்களின் ஆதிக்கத்தை வளர்க்கிறது.

பாட புத்தகங்களில் அறிவியலுக்கு ஒவ்வாத கருத்துக்களைத் திணிக்கிறது. வரலாற்றை புரட்டித் திரிக்கிறது. பண வசதியற்ற, சமூகத்தின் அடித்தட்டுப் பிரிவு மாணவர்களை கல்வி கற்றலில் இருந்து விலக்கி வைக்க NEP மூன்று, ஐந்து, எட்டு, பத்து, பன்னிரண்டு ஆகிய வகுப்புகளுக்கு எல்லாம் பொதுத் தேர்வை கொண்டு வருகிறது. இந்த முறையில் தேர்ச்சி பெற்றாலும் கூட, பல நுழைவுத் தேர்வுகளைக் கட்டாயமாக்கி, வருமான வசதியற்ற, சாமானியக் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் உயர்கல்வியைத் தொட விடாமல் தடுத்து, வர்ணாசிரமத்தை நவீன வகையில் உயிர்ப்பித்து வருகிறது.

இந்தியாவின் தன்னிறைவை, பொருளாதாரச் சுயசார்பை வலுவாக்குவதற்காக, 70 ஆண்டுகளாக நாடு உருவாக்கி, பாதுகாத்து வந்த மக்களின் பொதுச் சொத்துகலான பொதுத்துறை நிறுவனங்களை, அதானி, அம்பானி உள்ளிட்ட தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலையில் தாரை வார்த்து வருகிறது. இதன் காரணமாக கற்பனைக்கு எட்டாத பல கோடி சொத்துகளைச் சுருட்டிய ஒரு சிறு குழுவும், ஏழ்மையிலும் வறுமையிலும் உழலும் பல புதிய தேசியக் கல்விக் கொள்கை 2020 என்ற பெயரில் கோடிக்கணக்கான குடும்பங்களுமாக நாட்டை இரண்டாகப் பிரித்து விட்டது. இவர்களிடையேயான இடைவெளி படுவேகமாக அதிகரிக்கிறது.

மதம், சாதி என மக்களைப் பிளவுபடுத்தி, சொந்தச் சகோதரர்களை எதிரும் புதிருமாக நிறுத்தி சண்டையிட வைத்து, சமூக வாழ்வைப் பெரும் பதற்றத்துக்குள்ளாக்கியுள்ளது.

**தமிழ்நாட்டின் மீதான குறி வைத்த தாக்குதல்கள்**

தமிழ்நாட்டில் கால் ஊன்றி, தளம் அமைத்துக் கொள்ள இந்துத்துவ சக்திகள் வஞ்சக வழிமுறைகளில் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன.

தொழில்களிலும், உற்பத்தியிலும் தமிழ்நாடு முதனிலை மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. மதச்சார்பின்மையும் சகிப்புத்தன்மையும் இணைந்த நிலையில், சமூக அமைதி நிலவுகிறது. இவற்றைச் சீர்குலைக்க, ஆர்எஸ்எஸ் - பாஜக ஒன்றிய அரசு தனது முழு சக்தியினையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது.

ஜிஎஸ்டி வரி மூலம் தமிழ்நாட்டில் இருந்து பெரும் வருவாயை ஈட்டுகிற ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்கு உரிய பங்கீட்டையும் வழங்குவதில்லை. ஒரு ரூபாய்

வரியாக வசூலிக்கப்பட்டால், அதில் வெறும் 27 பைசா மட்டுமே தமிழ்நாட்டுக்குத் தரப்படுகிறது. ஆனால் பாஜக ஆளும் மாநிலங்களில் வசூலிக்கப்படும் வரித் தொகையை விட, இரண்டு மூன்று மடங்கு அதிகமாக திருப்பித் தரப்படுகிறது. வசூலிக்கப்படும் வரித்தொகையில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தை மாநிலப் பங்கீடாக வழங்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை அலட்சியப்படுத்துகிறது.

தமிழ்நாட்டின் சமூக நலத் திட்டங்களுக்கு தேவையான நிதியைக் குறைத்து, உள் கட்டமைப்புகளில் முதலீடு செய்வதைத் தடுத்து, உள்ளாட்சி நிர்வாகத்துக்கும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் தமிழ்நாடு பலமுறை பேரழிவை சந்தித்த போதும், அதற்கான பேரிடர் நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுக்கிறது.

ஒன்றிய அரசுப் பணிகளுக்கான யுபிஎஸ்சி, எஸ்எஸ்சி, ஆர்ஆர்பி போன்ற தேர்வுகளில் இந்திக்கு முன்னுரிமை தரப்படுகிறது. தமிழும் ஆங்கிலமும் பயின்ற தமிழ்நாட்டின் இளைஞர்களை ஒன்றிய அரசுப் பணியில் சேர முடியாமல் தடுக்கிறது. வங்கி, ரயில்வே போன்ற மக்களோடு தொடர்புடைய துறைகளிலும் கூட, தமிழ்நாட்டில் வட மாநில ஊழியர்களை நியமிக்கிறது. ஒன்றிய அரசின் ஆவணங்கள் மற்றும் இணையதளங்களில் இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றான தமிழ் புறக்கணிக்கப்படுகிறது.

காவிரி உள்ளிட்ட நீர் வளங்கள், கடலோர வளங்கள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் ஒன்றிய அரசு மேலாதிக்கம் செலுத்துகிறது. விவசாயம், மீன்வளம் போன்ற தொழில்களை இது கடுமையாக பாதிக்கிறது. மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத்தில், மின் கட்டணங்களைத் தொடர்ந்து உயர்த்துவது உள்ளிட்ட ஒன்றிய அரசு உருவாக்கியுள்ள திட்டங்கள் மூலம் மாநில நிர்வாகத்தை தடம் புரட்டுகிறது. தமிழ்நாட்டில் நிறைவேற்ற வேண்டிய 15க்கு மேற்பட்ட இரயில்வே திட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஒன்றிய அரசு கிடப்பில் போடுகிறது.

தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில், தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தால், தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய கல்வி நிதியைத் தர மறுத்து நிர்பந்திக்கிறது.ஆசிரியர்களுக்கு ஊதியம் தரக் கூட இயலாத இக்கட்டான நிலைக்குள் மாநில அரசைத் தள்ளுகிறது.

தமிழர்களின் தொன்மையை, உலகத்தில் முதலாவதாக இரும்பைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர்கள் என்ற உண்மையை வெளிப்படுத்த, வேண்டுமென்றே மறுக்கிறது. கீழடி ஆய்வுகள், அங்கு மக்கள் வாழ்ந்த காலத்தை அறிவியல் பூர்வமாக நிரூபித்த பின்னும், அது போதாது என்கிறது.

மனிதர்கள் தமக்குள் பேசிக் கொள்ளாத சம்ஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு, கடந்த பத்து ஆண்டுகளில் 2532.59 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்த ஒன்றிய அரசு, தொன்மை நிறைந்த, இலக்கிய இலக்கண வளமை பெற்ற, இன்றும் பேசப்பட்டு உயிரோடு இருக்கிற செம்மொழிகளான தமிழ், மற்றும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய தென்னிந்திய மொழிகள் அனைத்துக்கும் சேர்த்து வெறும் 147 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கி இருக்கிறது.

குடியரசுத் தலைவர் மூலம் நியமிக்கப்படும் ஆளுநரைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் மக்கள் ஆட்சிக்கு எதிராக, ஒரு போட்டி அரசை நடத்துகிறது. தமிழ்நாடு சட்டப்பேரவை நிறைவேற்றிய சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் அதிகார அத்துமீறல் தொடர்கிறது. உச்ச நீதிமன்றமே தலையிட்டு, ஆளுநரின் நடவடிக்கை தவறு எனச் சுட்டிக்காட்டி, கால வரம்பும் நிர்ண யித்து விட்டது. ஆனால் அதனை அலட்சியப்படுத்தி தன் போக்கிலேயே ஒன்றிய அரசு செயல்படுகிறது.

அதிகாரிகள், பல்கலைக்கழக துணைவேந்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரிடமும் இந்துத்துவ அரசியல் கருத்தியல் பிரச்சாரத்தை அதிகாரப்பூர்வமாக நடத்துவதற்கு ஆளுநர் பதவி பயன்படுத்தப்படுகிறது.

ஆர்எஸ்எஸ் - பாஜக கருத்தியலுக்கும் அரசியலுக்கும் எதிராக செயல்படுகிற எதிர்க்கட்சியினரை ஒடுக்க, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, மத்திய புலனாய்வுத் துறை உள்ளிட்ட துறைகளை ஏவி விட்டு, கைது செய்து சிறையில் அடைத்து அச்சுறுத்துவதும் மக்களிடம் இருந்து அவர்களைத் தனிமைப்படுத்தி, அவர்களது பிம்பத்தை சிதைப்பதுமான செயல்களை தொடர்ந்து அரங்கேற்றி வருகிறது.இவற்றோடு சேர்த்து, மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், கடவுளின் பெயரால், இனத்தின் பெயரால் தமிழ் மக்களைப் பிளவு படுத்த பல்வேறு வகைகளில், தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

உள்ளூர் திருவிழாக்களில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை அழித்து, விளக்கு பூஜை, 'சிறு' தெய்வ வழிபாட்டிலும் சமஸ்கிருத திணிப்பு, இறைச்சி உண்பது இழிவு என்ற மனநிலையை உருவாக்குதல், கேட்டறியாத வடபுல பண்டிகைகளை மதத்தின் பெயரால் உள் நுழைத்தல், சாதிச் சண்டைகளை தூண்டி விடுதல், ஆணவப் படுகொலைகளை அங்கீகரித்தல் என தமிழ்ச் சமூக வாழ்வில், தீய பண்பாட்டு மாற்றங்களை திணிக்க ஆர்எஸ்எஸ் பாஜக, சங்கப் பரிவாரங்கள் பல்வேறு பெயர்களில் பெரும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

சமூகம், அரசியல், பொருளாதாரம், கருத்தியல், பண்பாட்டுத் துறைகளில் பெரும் அச்சுறுத்தல்களை, தமிழ்நாடு எதிர்கொள்கிறது.

**தமிழ்நாட்டின் தனித்துவம்**

இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் சமூக அரசியல் சூழல் தனித்துவம் பெற்றது. இறை நம்பிக்கையும் பக்தியும் இங்கு அறிவியல் வாழ்க்கையையும் அனுமதிக்கின்றன. பகுத்தறிவு சிந்தனை பரவவும் இடம் தருகின்றன. மதம் என்பது இங்கு மனிதனைப் பிரித்து நிறுத்தவில்லை. மாறாக உறவு சொல்லி அழைக்கும் வகையில் நெருக்கமாக்கி இருக்கிறது. இந்த நல்லிணக்கத்தை அழித்து, ஒருவருக்கொருவர் பகைமை கொண்டவர்களாக்குவோம் என்கிறது பாஜக. திருப்பரங்குன்றம் நிகழ்வுகள் அதற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு. பல்வேறு முயற்சிகள் எடுத்து வளைய வளைய வந்து தாக்குதல் கொடுத்த பின்னும், தமிழ் மக்கள் அதற்கு இரையாகவில்லை.

அனைத்து சாதிகளைச் சார்ந்தவர்களும் பொறுப்பு வகிக்கிற, எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் அரசியல் கட்சிகள் இங்கு உள்ளன. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சாதியக் கட்சிகளில் கூட, அந்தந்த சாதியினர் முழுமையாக அணிதிரண்டு விடவில்லை. சமூகநீதிக்கான ஆதரவு இங்கு அதிகம்; ஒடுக்கப்பட்ட சாதி மக்களுக்கு உரிய வாய்ப்பு தருவதை மதித்து அங்கீகரிப்பவர்கள் அதிகம்; நல்லிணக்கமும், சகிப்புத்தன்மையும் ஒப்பீட்டளவில் தமிழ்நாட்டில் அதிகம்.

ஆங்கிலக்கல்வி அதிகரித்தாலும் கூட, தாய் மொழியாம் தமிழ் மீதான பற்றும், மண்ணின் மரபுகள் மீதான நம்பிக்கையும் இங்கு மங்கிவிடவில்லை. இந்தி மொழியைத் திணித்து, சொந்த மொழியை மங்கச் செய்வது, மற்ற மாநிலங்கள் போல இங்கு எளிதானதல்ல. தொன்மையும், இலக்கிய, இலக்கண வளமும் மிகுந்த தமிழ் மொழியை சிதைக்கவிடாமல் பாதுகாக்கும் விழிப்புணர்வு இங்கு அதிகம்.

கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் மிக நெடுங்காலமாக இடதுசாரிகள் இங்கு பெருமைக்குரிய பங்களிப்பை செலுத்தி இருக்கிறார்கள். கட்சி சாராத, நடுநிலையான பல துறை வல்லுநர்களும், கலைஞர்களும், அறிவு ஜீவிகளும், இடது சார்பு நிலை கொண்டவர்களாக, இடதுசாரிகள் மீது பெருமதிப்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

தொழிலாளர்களும், விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் இங்கு நடத்திய போராட்டங்கள் எண்ணற்றவை. அதன் வழியே தமது வாழ்வுரிமையையும், கண்ணியமான வாழ்வையும், சுயமரியாதையையும் நிலைநாட்டி இருக்கிறார்கள். அரசுகளின் அரக்கத்தனமான எதிர்நிலை கொள்கைகளால் அவை அழிக்கப்பட்டு விடாத வகையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

**பண்புகளை அழிப்பதே பாஜக**

இவை அனைத்தையும் தீயிட்டு பொசுக்குவதையே தனது அடிப்படைக் கொள்கையாகக் கொண்டது பாரதீய ஜனதா கட்சி. தனக்கு சொந்த பலம் இல்லாவிட்டாலும், அந்தந்த மாநிலங்களில் ஓர் அரசியல் கட்சியைத் தேர்வு செய்து, அதற்குள் ஊடுருவி, தன் சாயல் கொண்டதாக மாற்றி, பின்னர் அதனை அழித்து விட்டு அந்த இடத்தில் தான் அமர்ந்து கொள்ளும் நயவஞ்சகத்தில் பாரதீய ஜனதா கைதேர்ந்ததாகும்.

தமிழ்நாட்டில் ஆளுமைகள் இல்லாத அஇஅதிமுக, இன்று பாஜகவின் நயவஞ் சகத்துக்குப் பலியாகிக் கிடக்கிறது. மாநில நலன்கள் அழிப்பதைக் கண்டும், அதனை எதிர்த்து நிற்கும் தெம்பை அது இழந்து விட்டது.

அஇஅதிமுக கூட்டணியில் எத்தனை தொகுதிகளைப் பாஜக பெறும் என்பது பொருட்டல்ல. குறைந்த எண்ணிக்கையிலான சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, அதிக உறுப்பினர்கள் பெற்ற கட்சியை ஆட்சிக்கு வர விடாமல் பாஜக தடுத்ததை பல மாநிலங்களில் பார்த்து விட்டோம். வேட்புமனு தாக்கல் செய்யும் முன்பாகவே, தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும் என்று

பாஜக பிரகடனம் செய்து கொண்டிருப்பது, அஇஅதிமுகவுக்கு மட்டுமல்ல; தமிழகத்திற்கான எச்சரிக்கையுமாகும்.

இந்தத் தேர்தலில், அஇஅதிமுகவுடன் அணி சேர்ந்து இருந்தாலும் கூட, அதற்கு வெளியே பல மறைமுகக் கூட்டணிகளையும் பாஜக தயார் செய்து வைத்திருக்கிறது.

அவர்கள் ஒரு தொகுதியில் கால் பதித்தாலும் தமிழ்நாட்டின் தனித்துவப் பண்புகள் எல்லாவற்றையும் குறிவைத்து அழிப்பார்கள். சாதி, உட்பிரிவுகள், மதம் என கையில் கிடைத்ததில் எல்லாம் எண்ணெய் ஊற்றி தீயிட்டு, கலவரங்களை செய்தே, அரசியல் இலாபம் தேடுவது பாரதீய ஜனதா அரசியலாகும். அண்ணன் தம்பிகளாக பழகியவர்களை கூட எதிரிகளாக்கும் சதியை கற்றுத்தேர்ந்தவர்கள்.

இவற்றுக்கு எதிராக மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி, முற்போக்கு சக்திகள் திட்ட அடிப்படையில் ஒருங்கிணைந்து, இன்னும் கூடுதல் வலிமை பெறுவது இன்றைய அரசியல் தேவையாகிறது.

அஇஅதிமுக வின் தொடக்க காலத்தில், திராவிடக் கருத்தியலின் அடையாளங்கள் இருந்தன. அவை நீர்த்துக்கொண்டே வந்து, தற்போது பாஜகவின் கருத்தியலோடு கரைந்து விட்டன. பாஜகவுடன் கூட்டணி சேர்ந்ததை அஇஅதிமுக தொண்டர்களும், அந்தக் கட்சியோடு உடன்பட்டு நின்றவர்களும் விரும்பாததால், சென்ற நாடாளுமன்றத் தேர்தலில், இனிமேல் ஒருபோதும் கூட்டணி இல்லை என்று அந்த கட்சியின் தலைமை அறிவித்தது.

ஆனால் அதன் அரசியல் நிலையில் அதனால் உறுதியோடு நிற்க முடியவில்லை. மடியில் கனம் இருந்ததால் வழியில் பயம் வந்து விட்டது. நிர்ப்பந்தம் செய்து பாஜக தனது கூட்டணிக்கு கொண்டு வந்துவிட்டது.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் வலம் வரும் ஆர்எஸ்எஸ் பிஜேபி தலைவர்கள் நரேந்திர மோடியும் அமித் ஷாவும், தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி என்று திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள்.

அஇஅதிமுக தனித்து ஆட்சி அமைக்கும் என்று அதன் தலைமை திரும்பத் திரும்பச் சொன்னாலும், ஒரு முறை கூட அதனை வழி மொழிந்து பாஜக தலைவர்கள் பேசவில்லை. முதலமைச்சராக யாரை முன்னிறுத்தப் போகிறோம் என்பதையும் சொல்லவில்லை.

அஇஅதிமுக, பாஜகவுடன் கைகோர்த்துள்ள நிலையில், இது வெறும் தேர்தல் கூட்டணி அல்ல; மாறாக, மாநில உரிமைகளைத் தாரைவார்க்கும் முயற்சி என்பது தெளிவாகி விட்டது. அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையில், சிக்கியுள்ள வழக்குகளில் இருந்து தண்டனை கிடைத்து விடாமல் தப்பிப்பதற்கான திசையில், தனது சொந்த மாநிலத்தையே காவு கொடுக்கத் துணிந்து விட்டது.

மாநிலத்தில் பெரிய கட்சியின் பொறுப்பாளர்களின் பலவீனங்களை பயன்படுத்தி, அச்சுறுத்தி, கூட்டணி அமைத்து, அதனை உடைத்துச் சிதைத்து, படிப்படியாக தனதாக்கிக் கொள்ளும் அரசியல் உத்தியை தமிழ்நாட்டிலும் பாஜக தொடங்கிவிட்டது.

அதே நேரத்தில், வேறு சில கட்சிகளை கூட்டணிக்கு வெளியே வைத்துக் கொண்டு, திமுக ஆட்சியின் மீது வசை பாடுவதற்கும், சிறந்த சமூக சீர்திருத்த சிந்தனையாளரும் கிளர்ச்சியாளருமான பெரியார் மீது தரம் தாழ்ந்த விமர்சனங்களை வைப்பதற்கும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறது.

திமுக தலைமையிலான கூட்டணியை உடைப்பதற்கும், பாஜக இடைவிடாமல் முயற்சித்தது. திமுக ஆட்சி மீது, கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு இயல்பாக ஏற்படும் கருத்து மாறுபாடுகளைப் பெரிதுபடுத்தி, கூட்டணி உடையப் போகிறது என்பது போன்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. அவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை என்பதை நிகழ்ச்சிப் போக்குகள் உறுதி செய்து விட்டன.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில், காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), விடுதலை சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மக்கள் நீதி மய்யம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்டவை நீடிக்கின்றன.

இக்கட்சிகள் வகுப்புவாதத்திற்கு எதிராக, அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். மதச்சார்பின்மை கொள்கை காக்கப்பட வேண்டும், மாநில உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் அரசியல் ரீதியாக உறுதியாக இருப்பது அரசியல் அணிச் சேர்க்கையின் அடித்தளமாகும். தமிழ்நாட்டில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நாடு முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. புதிதாக தேசிய முற்போக்கு திராவிட கழகம், மனிதநேய ஜனநாயகக் கட்சி, எஸ்டிபிஐ, முக்குலத்தோர் புலிப் படை, தமிழர் தேசம் கட்சி உள்ளிட்ட கட்சிகள் சேர்ந்துள்ளன.

இன்றைய சூழலில், மக்களுக்கு நேர் எதிரான, அரசியல் சட்டத்தைக் கூட மதிக்காத, மாநில உரிமைகளை மடக்கிப் போட்டு, சர்வாதிகாரத்தை நிலை நாட்டும் வேட்கையோடு, தமிழ்நாட்டை வேட்டையாட வருகிற மதவெறி சக்திகளிடமிருந்து மாநிலத்தைப் பாதுகாப்பதே முன்னுரிமையாக நிற்கிறது.

இவற்றை முறியடிக்க, மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி முற்போக்கு கட்சிகள் ஓரணியாக தேர்தலை சந்திப்பது அவசியமாகிறது. இடதுசாரிகளின் தற்போதைய மிக முக்கிய நோக்கம், தமிழ் மண்ணில் பாசிச மற்றும் வகுப்புவாத சக்திகளை கால் பதிக்க விடாமல் தடுப்பதே ஆகும்

**பாஜக – அஇஅதிமுக கூட்டணியைத் தோற்கடிப்போம்**

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான 17வது பொதுத் தேர்தலில், கட்சி அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாபெரும் வெற்றி பெறுவதற்கு உரிய வகையில் நமது அணுகுமுறையும், நடவடிக்கைகளும் அமைய வேண்டும் என்று, சேலத்தில் 2025

ஆகஸ்ட் 15,16,17,18 தேதிகளில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26 ஆவது தமிழ்நாடு மாநாடு தீர்மானித்து வழிகாட்டியிருக்கிறது.

பாஜகவால் தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பது ஒரு புறம் இருந்தாலும், அது தனது தகிடுதத்தங்கள் மூலம் வளர்வதும் கூட தமிழ்நாட்டுக்கு பேராபத்தானது.

தமிழ்நாட்டின் தனித்துவத்தையும் மாநில நலன்களையும், ஒன்றிய அரசிடமிருந்து தமிழ் மக்களையும் பாதுகாக்க, பாஜகவையும் அதனுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் சேர்ந்துள்ள இதர கட்சிகளையும் தோற்கடிப்பதே இன்றைய அரசியல் அறமாகும்; இலக்கும் இலட்சியமும் ஆகும்.

பாஜக அஇஅதிமுக கூட்டணியைத் தோற்கடித்து. திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி முழு வெற்றி பெற, ஒவ்வொரு தொகுதியிலும் முனைந்து களமாடுவோம்!

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி கூறுகிறது**

தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு மேம்பாட்டுக்காக, தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக 100 ஆண்டுகளாக களத்தில் நின்று போராடி வருவது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பதை பெருமிதத்துடன் உங்கள் முன்வைக்கிறோம். அந்தப் பாரம்பரியத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம்.

இந்தியாவையும் தமிழ்நாட்டையும் சீர்குலைக்கும் மதவெறி பாசிச சக்திகளை குறைந்தபட்சம் தமிழ்நாட்டில் காலூன்றாமல் தடுப்பதை இலக்காக கொண்டு, அந்த முயற்சியில் தமிழ்நாட்டில் தற்போது உள்ள அரசியல் சூழலில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஐந்து வேட்பாளர்கள் இந்த தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

**இவர்கள் பின்வரும் கோரிக்கைகளுக்காக சட்டப்பேரவைக்குள்ளும், சட்டப்பேரவை உறுப்பினர் என்ற தகுதி நிலையைப் பயன்படுத்தியும் தொடர்ச்சியாக இயங்குவார்கள்; குரல் கொடுப்பார்கள்; இந்தக் கோரிக்கைகள் நிறைவேற தமிழ்நாட்டு மக்களுடன் சேர்ந்து நிற்பார்கள்.**

**சட்டப்பேரவை உறுப்பினர்களின் செயல்பாட்டையும், மக்கள் நலனையும் ஒருங்கிணைப்பதோடு, பின்வரும் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து அனைத்து வகைகளிலும் முயலும், தேவைக்கேற்ற போராட்டங்களை முன்னெடுக்கும் என்று இதன் மூலம் உறுதி அளிக்கிறோம்.**

**1. தொழில் வளர்ச்சி**

- தமிழ்நாடு, இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் பல்வகைத் துறை அடித்தளம், திறமையான மனித வளம், வலுவான உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் முன்னணியில் உள்ளது.
- அதே நேரத்தில், புதிய தொழில்கள், மாவட்ட சமநிலை வளர்ச்சி, தொழிலாளர் நலன் ஆகியவற்றில் மேலும் கவனம் செலுத்தினால், தமிழ்நாடு இந்தியாவின்

முன்னணி தொழில்துறை மாநிலமாக மட்டுமல்ல, உலகளவிலும் முக்கிய உற்பத்தி மையமாக உயர முடியும்.

- *மின்சாரம்:* அனைத்து தொழில்களுக்கும் இடையறாத, குறைந்த கட்டண மின்சாரம் வழங்க மாநில அரசு உறுதி செய்ய வேண்டும். தனியார்மயப்படுத்தலை தவிர்த்து, பொதுத்துறை மின்சார அமைப்பை வலுப்படுத்த வேண்டும்.
- *அடிப்படை கட்டமைப்பு விரிவாக்கம்:* சாலை, ரெயில், துறைமுகம், குளிர்சாதன சேமிப்புக் களஞ்சியம் உள்ளிட்ட வசதிகளை அரசு நேரடி முதலீட்டில் விரைவாக மேம்படுத்த வேண்டும்.
- *பொதுத்துறை விரிவாக்கம்:* முக்கிய உற்பத்தித் துறைகளில் மாநில பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும். தனியார் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும்.
- *நிலம் கையகப்படுத்துதல்:* தொழில்களுக்கு நிலம் கையகப்படுத்தும் போது விவசாயிகள் மற்றும் உள்ளூர் மக்களின் உரிமைகளை பாதுகாத்து, நியாயமான இழப்பீடு வழங்க வேண்டும். கட்டாய நிலப் பறிமுதல் நடைமுறைகளை கைவிட வேண்டும்.
- *திறன் மேம்பாடு:* அரசு ஐடிஐ, பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி மையங்களை தொழில்துறையுடன் இணைத்து, இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு பயிற்சி வழங்க வேண்டும்.
- *புதிய துறைகள்:* மின்சார வாகனங்கள், மின்னணு உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற உயர்தர துறைகளில் அரசு முன்னெடுத்து, வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கட்டுப்படுத்த வேண்டும் முதலீடுகளை ஈர்க்க வேண்டும்.
- *ஏற்றுமதி வளர்ச்சி:* துறைமுகங்களுடன் இணைந்த ஏற்றுமதி மையங்கள் அமைத்து, "தமிழ்நாடு உற்பத்தி" என்ற அடையாளத்தை உலக சந்தையில் நிலைநிறுத்த வேண்டும்.
- *மாவட்ட சமநிலை:* சென்னை மையமாக மட்டுமே தொழில் வளர்ச்சியை திரட்டாமல், தென் மற்றும் பின்தங்கிய மாவட்டங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க வேண்டும்.
- அதே நேரத்தில், குறைந்தபட்ச ஊதியம், நிரந்தர வேலை, பாதுகாப்பான பணி ஆகியவற்றை சட்டப்படி கடுமையாக அமல்படுத்த வேண்டும். ஒப்பந்த வேலை முறையை சிறுகச் சிறுக கைவிட வேண்டும். தொழில் வளர்ச்சி பெயரில் சுற்றுச்சூழல் அழிவை அனுமதிக்காமல், பசுமை தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அனுமதி வழங்கும் முறைகளை எளிமைப்படுத்தி, ஊழலை கட்டுப்படுத்தி, முழுமையான வெளிப்படை நிர்வாகத்தை உறுதி செய்ய வேண்டும்.
- தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி, பெரிய முதலாளிகளின் லாபத்திற்காக அல்ல; மக்கள் நலன், வேலைவாய்ப்பு, சமூக நீதி ஆகியவற்றை மையமாகக் கொண்டு

நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் அரசுத் திட்டங்கள் அமைய வேண்டும்.

### சிறு, குறு, நடுத்தர தொழில்களின் வளர்ச்சி

- ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பளித்துவரும் சிறு, குறு, நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கு வட்டி சலுகை கடன், வரி தளர்வு, மின் கட்டண சலுகை வழங்கி அவற்றை பாதுகாக்க வேண்டும். பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமே ஆதரவு அளிக்கும் போக்கை நிறுத்த வேண்டும். மூடப்பட்ட சிறு, குறு தொழிற்சாலைகளைத் திறந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- இத்தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு சந்தை வாய்ப்பை விரிவுபடுத்த உரிய முயற்சி மேற்கொள்ளப்படும். தொழில் முனைவோர் அமைப்புகளோடு கலந்து விவாதித்து மேம்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க ஓர் ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.

### 2. விவசாயம்

- தமிழ்நாட்டில் நகர விரிவாக்கம் மிக வேகமாக நடந்து வருவதால், விளைநிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் நன்கு திட்டமிட்டு, தகுதியுள்ள நிலங்களுக்கு பாசன வசதியை மேம்படுத்தி, விளைநிலங்களின் பரப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.
- இயற்கை வேளாண்மைக்கு மானியங்கள் வழங்கி ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- விவசாய நிலங்களில் உயர் மின் கோபுரங்கள், எரிவாயு மற்றும் எண்ணெய்க் குழாய் அமைப்பது எட்டுவழிச்சாலை போன்ற விரைவுச் சாலை அமைக்கும் திட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு விவசாயிகள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்.
- வானம் பார்த்த பூமியாக இருக்கும் மானாவாரி புன்செய் விவசாயத்துக்கு தனி கவனம் செலுத்தப்பட வேண்டும். ஊட்டச்சத்து மிக்க இந்தப் பயிர்களைப் பாதுகாக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும் வேளாண் துறைக்குள் தனியாக பொருத்தமான அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.
- மரபணு மாற்று அல்லது திருத்த தொழில்நுட்பத்தை தடை செய்ய வேண்டும்.
- விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை தந்து தீர்வு செய்வதற்காக, மாவட்ட அளவில் விவசாயிகள் பிரதிநிதிகளைக் கொண்ட வேளாண் குறைதீர்வுக் குழுவும், மாநில அளவிலான விவசாயிகள் ஆணையமும் அமைக்கப்பட வேண்டும்.

- பஞ்சாலைகள் நிறைந்த தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பருத்தி போதுமானதாக இல்லை. எனவே பருத்தி விளைச்சலை அதிகரிக்க சிறப்பு மானியம் தரும் வகையில் உரிய ஊக்கத் திட்டங்களை உருவாக்கி, அமலாக்கப்பட வேண்டும்.

### 3. பாசன வசதி

- தமிழ்நாட்டின் பாசனத் தேவைகளை பெருமளவு விரிவுபடுத்த தென்னக நதிகள் இணைப்புத் திட்டங்கள், இதர மாநில அரசுகள், ஒன்றிய அரசுடன் இணக்கமாகப் பேசி, உருவாக்கப்படட வேண்டும்.
- காவிரி மேலாண்மை வாரியத்தையும் ஒழுங்காற்று குழுவையும் காவிரி நடுவர் மன்றம் வழங்கிய வழிகாட்டுதலின்படி அமைத்து தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட காக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- தமிழ்நாட்டின் அணைகளுக்கான நீர்வரத்தை பெருக்குவதற்கு உரிய வகையில் துறை வல்லுநர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், சூழலியலாளர்களிடம் கலந்து பேசி திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- கொடூரமான மணல் கொள்ளையினால், தமிழ்நாட்டின் ஆறுகள் அவற்றின் தன்மையையே இழந்துவிட்டன. அவற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கு உரிய கவனமும் தக்க நிதி ஒதுக்கீடும் செய்யப்பட வேண்டும்.
- விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பயிற்சி திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் மழைக்காலங்களில் வீணாக தண்ணீர் கடலில் சென்று கலப்பதை தடுக்க தடுப்பு அணைகள் அமைக்கப்பட வேண்டும்.
- நீர்வரத்துக் கால்வாய்கள், நீர் நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு. நீர் நிலைகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி நீர்க் கொள்ளளவு அதிகரிக்கப்பட வேண்டும்.
- குடிமராமத்து முறை அழுத்தமாக செயலாக்கப்பட்டு. இத்திட்டத்தில் நிலவும் ஊழல் முறைகள் கண்டறிந்து நீக்கப்பட வேண்டும்.
- நிலத்தடி நீர் எடுப்புக்கான விதிமுறைகள் கடுமையாக்கப்பட வேண்டும். நிலத்தடி நீர் மேம்பாட்டுக்கான திட்டங்களை அமலாக்க வேண்டும்.

### 4. குடிநீர்

- தமிழ்நாட்டில் குடிநீர் பெறுவதை சட்டப்பூர்வமான அடிப்படை உரிமையாக அறிவித்து, அதை முழுமையாக அரசின் பொறுப்பில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஊரகமும் நகர்ப்புறமும் 24 மணி நேரமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தை அரசு கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும்; உள்ளாட்சி அமைப்புகளின் திறனை விரிவாக்க வேண்டும்.
- கிட்டத்தட்ட தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வணிக மயமாக்கப்பட்டு விட்டதைக் கட்டுப்படுத்தி, டேங்கர் லாரி மற்றும் பாட்டில் நீர் விற்பனைக்கு

கடுமையான அனுமதி, விலை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு விதிக்க வேண்டும்.

- நிலத்தடி நீர் சுரண்டலை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை அமல்படுத்தி, அதிக சுரண்டல் பகுதிகளில் புதிய கிணறு அனுமதிகளை நிறுத்த வேண்டும்.
- மழைநீர் சேகரிப்பை கட்டாயமாக கடுமையாக அமல்படுத்தி, ஏரி, குளம், கால்வாய்களை அரசு நேரடியாக சீரமைத்து பாதுகாக்க வேண்டும்.
- கடல் நீரை குடிப்பதற்கு தக்க தண்ணீராக மாற்றும் திட்டங்கள், நீர் மாற்று திட்டங்கள், சேமிப்பு திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும்.
- சமூக, பொருளாதார வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து மக்களுக்கும் சமமாக நீர் வழங்கப்பட வேண்டும்.
- அதிக நீர் பயன்படுத்தும் தொழில்களுக்கு மீள்பயன்பாடு கட்டாயமாக்கி, குடிநீர் ஆதாரங்களை தொழில்துறைக்கு மாற்றுவதைத் தடுக்க வேண்டும்.
- நீர் மேலாண்மையில் உள்ளூர் சமூகங்களின் பங்கேற்பை உறுதி செய்து, கூட்டு நிர்வாக முறை அமல்படுத்த வேண்டும்.
- நீர் திட்டங்களில் முழுமையான வெளிப்படை கண்காணிப்பை ஏற்படுத்தி, ஊழல் மற்றும் தனியார் சுரண்டலை கடுமையாகத் தடுக்க வேண்டும்.

**5. சுற்றுச்சூழல்**

- தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள், நிலம், நீர், காடுகள், கடற்கரை அனைத்தும் கட்டுப்பாடற்ற கார்ப்பரேட் சுரண்டல், திட்டமிடாத நகரமயமாக்கலால்,கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இது வெறும் சுற்றுச்சூழல் பிரச்சனை அல்ல; மக்களின் வாழ்வாதாரம், பொதுச் சுகாதாரத்தை நேரடியாக தாக்கும் சமூகப் பிரச்சனை ஆகும்.
- ஆயிரம் பேருக்கு ஒரு பொதுக் கழிப்பிடம் வீதம் இருக்க வேண்டும். பேருந்து நிலையங்கள், நீண்ட தூரப் பேருந்து நிற்கும் இடங்களில் கட்டணம் இன்றி தூய்மையான கழிப்பிடங்கள் அமைக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் சரியாக பராமரிக்கப்படுகிறதா என்பதை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும்.
- நீர், நிலம், காடு ஆகியவை தனியார்மயப்படுத்தப்படாமல் பொது வளங்களாக பாதுகாக்கப்பட வேண்டும்.
- தொழிற்சாலைகளுக்கு கடுமையான சுற்றுச்சூழல் கட்டுப்பாடு விதிமுறைகளை மீறுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.
- ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் மீட்டெடுக்கப்பட வேண்டும்.

- காடு மற்றும் பழங்குடி பாதுகாப்பு காடு அழிக்கும் திட்டங்களை தடுத்து நிறுத்த வேண்டும்.
- மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளை (Eco Sensitive Zone) பசுமை பாதுகாப்பு மண்டலம் ஆக அறிவிக்க வேண்டும்.
- வேதியியல் உரம், பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைத்து இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- கடற்கரைகளிலிருந்து மீனவர்களை அகற்றிவிட்டு, கார்ப்பரேட்டுகள் கையில் தந்து வணிகமாக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இதற்குத் துணை போகும் ஒன்றிய அரசின் கொள்கைகளை உறுதியாக எதிர்க்க வேண்டும்.
- தனியார் வாகன பயன்பாட்டை குறைக்கும் வகையில் பொதுப் போக்குவரத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும்.
- பயோமைனிங் முறையை செயல்படுத்தி நிலங்களை மீட்டெடுக்க வேண்டும்.
- கழிவு மேலாண்மை சென்னை பெருங்குடி, கும்பகோணம் மாநகராட்சிகளைப் போல விரிவாகவும் அறிவியல் பூர்வமாகவும் செயல்படுத்தப்பட வேண்டும்.
- மட்கும் குப்பைகளை கொண்டு, நுண் உரம் தயாரித்தல், பிளாஸ்டிக் கழிவுகளை சாலை போடுதல், செங்கல் தயாரித்தல் உள்ளிட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.
- திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் குறைந்த கூலிக்கு தூய்மை பணியாளர்களை அமர்த்தி, அவர்கள் மீது தாங்க முடியாத வேலைப்பளுவை சுமத்தும் போக்கை நிறுத்த வேண்டும்.
- மக்கள் பங்கேற்கும் வகையில் கழிவு பிரித்தல், மறுசுழற்சி கட்டாயமாக்கல், உள்ளூர் நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்பு ஆகியவை குறித்து திட்டங்கள் வகுத்து செயல்படுத்திட வேண்டும்.
- தமிழகத்தின் வனவளத்தை அதிகரிக்க மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒருபங்காக வனப்பரப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.
- மரங்களின் எண்ணிக்கையை உயர்த்த பொதுமக்கள் ஒத்துழைப்போடு, மரங்கள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் .
- தோல், ஜவுளி, தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட தொழிற்சாலைகளின் கழிவுநீர் மண்ணைப் பாழ்படுத்தாமல் தடுக்க, ஒருங்கிணைந்த சுத்திகரிப்புத் திட்டத்தை அரசே உருவாக்கி அமலாக்க வேண்டும். சுத்திகரிக்கப்பட்ட நீரை. நீர்நிலைகளுக்குள் விடாமல், மறுசுழற்சி செய்ய வேண்டும்

## 6. சமூக நீதி

- தமிழ்நாட்டில் சாதி, வர்க்க, பாலின அடிப்படையிலான அநீதிகளை ஒழித்து, சமூக நீதி முழுமையாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

- நடைமுறையில் உள்ள 69% இடஒதுக்கீடு முறை பாதுகாக்க பாடுபடுவோம்.
- சாதி ஆணவப் படுகொலையைத் தடுத்து நிறுத்த சிறப்பு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.
- சாதி மறுப்பு திருமணம் செய்து கொள்கிற தம்பதியினருக்கு வேலைவாய்ப்பிலும், அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
- கல்வி மற்றும் அரசு வேலைகளில் உள்ள ஒதுக்கீட்டை முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும்.
- ஒதுக்கீட்டில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.
- தனியார் துறையிலும் ஒதுக்கீட்டு கொள்கை அமல்படுத்த சட்டம் கொண்டு வர வேண்டும்.
- கிராமப்புற, பழங்குடி, தலித் மாணவர்களுக்கு முழுமையான உதவித்தொகை உயர்கல்வி சேர்க்கையில் சமூகநீதியை உறுதி செய்ய தனி திட்டங்கள், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குதல், கிராமப்புற வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல் நகர்ப்புற ஏழைகளுக்கு வாழ்வாதார பாதுகாப்பு உருவாக்கித் தர வேண்டும்.
- சாதி அடக்குமுறைக்கு எதிரான கடுமையான நடவடிக்கை சாதி அடிப்படை யிலான வன்முறைக்கு விரைவான நீதிமுறை பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு, நிவாரணம் வழங்கவும் சட்டத்தை தொய்வின்றி அமலாக்கவும் வேண்டும்.
- பெண்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை, பாலியல் வன்முறைக்கு எதிரான விரைவான நீதிமுறை, பெண்கள் சுயஉதவி குழுக்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.
- கல்வி, சுகாதாரம், பொதுச் சேவைகளில் தனியார்மயத்தை கட்டுப்படுத்த வேண்டும். பொதுத்துறை வலுப்படுத்தப்பட வேண்டும்.

## 7. தமிழ், தமிழ்ப் பண்பாடு

- தமிழ்நாட்டில் தாய்மொழித் தமிழை பயிற்று மொழியாகவும், உயர்நீதிமன்றத்தில் வழக்காடும் மொழியாகவும், ஆலயங்களில் வழிபாட்டு மொழியாகவும் உறுதிப்படுத்த தளர்வில்லாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயா மற்றும் பன்னாட்டுப் பள்ளிகளிலும் தமிழை இரண்டாவது பாடமாக ஏற்று, தமிழ் ஆசிரியர்கள் நியமித்து தமிழைப் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- இந்தியாவில் சமஸ்கிருதம், உருது உள்ளிட்ட பல மொழிகளுக்கு பல்கலைக் கழகங்கள் உள்ளன. அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு ஏற்கனவே உருவாக்கி செயல்பட்டு வருகிற தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்துக்கு,

இந்திய அரசு நிதி நல்கி, அதனை சிறப்பு நிலைப் பல்கலைக்கழகமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ஒன்றிய அரசின் சாகித்ய அகாதமியைப் போல, தமிழ் ஆய்வு உள்ளிட்ட தாய்மொழி மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து உயர்த்த தமிழ்நாடு அரசு ஒரு நிறுவனத்தை அமைக்க வேண்டும்
- இந்தியாவிலேயே மிக அதிக கல்வெட்டுகள் தமிழ் மொழியில் உள்ளன. தமிழ்நாட்டில் கல்வெட்டு பாதுகாப்பு மையம் துவக்குவதோடு, மங்களூரில் வைக்கப்பட்டுள்ள தமிழ் கல்வெட்டுகளையும் இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.
- நாட்டுப்புறக் கலைஞர்களை நலவாரியத்தில் சேர்ப்பது விரைவு படுத்தப்பட வேண்டும். மாவட்டம்தோறும் சிறந்த கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்க வேண்டும்.
- தமிழ்நாடு தொல்லியல் துறை அலுவலர்களுக்கான பணியிடங்களில், தமிழ் இலக்கியம், கல்வெட்டியல், தொல்லியல் பாடங்களில் முதுகலைப் பட்டம் படித்த மாணவர்களுக்கு மீண்டும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

### 8. தொழிலாளர் நலன்

- 150 ஆண்டு காலத்துக்கும் மேலாக, தொழிலாளர்கள் போராடிப் பெற்றுள்ள தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு 4 சட்டத் தொகுப்புகளை, 2026 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. இந்தச் சட்டத் தொகுப்புகளை எமது மாநிலத்தில் செயல்படுத்த மாட்டோம் என கேரள மாநில அரசைப் போல, தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும்.
- விவசாயத் தொழிலாளர் உள்ளிட்ட குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட தொழில்களில், அந்த அரசாணைகள் அமலாக்கப்படாத நிலையை மாற்றி, சரியாக அமலாக்கம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- அனைத்துத் தொழில்களிலும் மாதம் ரூ.26,000க்கும் குறையாத வகையில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை, அதனை மறு நிர்ணயம் செய்ய வேண்டும்.
- தொழிலாளர் துறையின் கீழ் இயங்கும் சட்டப்படியான மற்றும் மரபு ரீதியான அனைத்து முத்தரப்புக் குழுக்களும், அனைத்து தொழிற்சங்கங்கள், வேலையளிப்போர் அமைப்புகளுக்கு பிரதிநிதித்துவம் அளித்து திருத்தியமைக்கப்பட வேண்டும். விதிகளில் குறிப்பிட்டுள்ள கால இடைவெளிகளில் கூட்டங்கள் நடத்துவது உறுதி செய்யப்பட்டு, அக்கூட்டங்களின் முடிவுகள் அமலாக்கப்பட வேண்டும்.
- கட்டுமானம், உடலுழைப்பு தொழிலாளர் நலவாரியங்களில் தொழிலாளர்களை பதிவு செய்தல், புதுப்பித்தல், நல நிதி பெறுதல் ஆகியவற்றில் உள்ள

தேவையற்ற இடையூறுகள் நீக்கப்பட வேண்டும். கட்டடம் ஆட்டோ தவிர்த்த மற்ற நல வாரியங்களுக்கு நலநிதி வசூலிக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கட்டுமான தொழிலாளர்களுக்கான நிதிப் பலன்களை உயர்த்துவதோடு மாத ஓய்வூதியத்தை ரூபாய் ஆறாயிரம் என்று உயர்த்த வேண்டும். உடல் உழைப்பு வாரியங்களுக்கு நிதியில்லை என்ற காரணம் காட்டி, நிதி இருக்கும் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திலும் நிதிப் பலன்களை உயர்த்த மறுப்பதைக் கைவிட வேண்டும்.

- எந்த தொழிலில் பணிபுரிந்தாலும், சட்டப்படி ஓய்வூதியம் கிடைக்காத தொழிலாளர்களுக்கு, மாநில அரசே ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.
- சொந்தமாக வாகனத்தை வைத்திருந்தும், ஓலா, ஊபர் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களின் கீழ் தகவல் பெற்று இயக்குவதால் சுரண்டப்படும் ஆட்டோ, டாக்ஸி தொழிலாளர்களை பாதுகாக்க தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ‘செயலி’ உருவாக்க வேண்டும்.
- உணவு மற்றும் வீடுகளுக்கான பொருட்களை இணைய இயங்கு தளங்கள் (App) வழியாக ஆர்டர் பெற்று, எடுத்துச் சென்று தருகிற ‘கிக்’ பணியாளர்களை, தொழிலாளர் என்று அங்கீகரித்து சட்டம் இயற்ற வேண்டும்.
- புலம் பெயர்ந்த தொழிலாளர் நலச் சட்ட விதிகளின்படி, அவர்களது பெயர், முகவரி உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் கொண்ட பதிவேடு உருவாக்கப்பட்டு, அவர்களது சம்பளம், பயணப்படி மற்றும் இதரப் பணப் பயன்கள் சட்டவிதிகளின்படி வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். அவர்களின் வேலைநிலைமைகள், வாழ்நிலை பற்றி ஆய்வு செய்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- தூய்மை பணியாளர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பணிகள், அரசு மருத்துவமனைகள், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்), போக்குவரத்து கழகங்கள் உள்ளிட்ட அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் அனைத்திலும், ஒப்பந்த முறை, அயல் பணி (அவுட்சோர்சிங்) முறைமை ஒழிக்கப்பட வேண்டும். தற்போது பணியில் இருந்து வரும் தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளர்கள், சட்டங்கள், விதிகளின்படி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.
- திட்டப்பணியாளர்களுக்கு ‘தொழிலாளர்’ எனும் தகுதி வழங்கப்பட வேண்டும்.
- ஆஷா, அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஒன்றிய அரசின் நிதியோடு, மாநில நிதிப் பங்களிப்பு தந்து மாத ஊதியம் ரூ.26,000 வழங்க வேண்டும்.
- பெண் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 12 நாட்கள் மாதவிடாய் விடுப்பு வழங்க வேண்டும்.

- தொழிலாளர் சட்டங்கள் மற்றும் அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமைகளின் அடிப்படையில் தொழிலாளர் போராட்டங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதோடு, உரிய தீர்வுகளை விரைவில் எட்டும் வகையில் தொழிலாளர் துறை, காவல்துறை ஆகியவை முடுக்கி விடப்பட வேண்டும்.
- இதுவரையில் தொழிலாளர் போராட்டங்களுக்காகப் போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

### 9. விவசாயிகள் நலன்

- விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காததால், வட்டிக்கு மேல் வட்டி ஏறி கடன் நெருக்கடி கழுத்தை நெறிப்பதாலும், இடுபொருட்களின் விலை உயர்வாலும் விவசாயிகள் வாழ்க்கையின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
- இதன் நேரடி விளைவாக தற்கொலைச் சாவுகளும், அதிர்ச்சி மரணங்களும் அதிகரிக்கின்றன.
- இவற்றைப் போக்க விவசாயிகளின் பொதுத்துறை வங்கிக் கடன், மத்திய கால கடன், கூட்டுறவு வங்கி உள்ளிட்ட அனைத்துக் கடன்களும் ரத்து செய்யப்பட வேண்டும். வட்டியில்லாத விவசாயக் கடன்கள் வழங்கப்பட வேண்டும். கந்து வட்டி கொடுமையிலிருந்து மீட்டெடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிப்பதோடு, அதைவிட குறைவான விலைக்கு கேட்பவர்களுக்கு தண்டனை வழங்குவது குறித்த மாநிலச் சட்டம் இயற்றப்பட வேண்டும். விளைநிலத்துக்கான வாடகை, குடும்ப உழைப்பு ஆகிய எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய அடக்க விலையோடு 50 சதவீதம் சேர்த்து குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- விவசாய விளைப் பொருட்களின் அரசு கொள்முதலில் ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதார விலைக்கு மேலாக எவ்வித கூடுதல் தொகையையும் அளிக்க கூடாது என ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளது. விவசாயிகளின் துயரத்தை புரிந்து கொண்டு மாநில அரசு கொடுத்து வரும் ஊக்கத் தொகையை தடுக்கும் ஒன்றிய அரசின் அடாவடி உத்தரவு புறக்கணிக்கப்பட வேண்டும்.
- தனியார், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகை உடனடியாக வழங்கப்படவும், தொடர்ந்து பாக்கியின்றி தொகை வழங்குவதை உறுதி செய்யவும் வேண்டும்.
- விவசாயிகளுக்கு சட்ட உரிமைகள், வங்கி கடன் வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த கல்வி மையங்கள் அமைக்க வேண்டும்

- தற்போது நடைமுறையில் உள்ள பயிர் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு பயனளிப்பதை விட பாதிப்புகளை அதிகப்படுத்துவதாக உள்ளது இதனை மாற்றி அமைத்து பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக விவசாயிகளின் பயிர்கள் அனைத்தும் காப்பீடு செய்யப்பட்டு காப்பீட்டுக்கான பிரீமியம் தொகையை அரசே முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 10. விவசாயத் தொழிலாளர் நலன்

- ஒரு கோடிக்கும் அதிகமான விவசாய தொழிலாளர் வாழ்க்கை நிலைகளை சமூக பொருளாதார அடிப்படையில் ஆய்வு செய்து வாழ்வாதாரத்தை பாதுகாத்திட உயர்மட்ட ஆய்வுக் குழு அமைக்க வேண்டும்
- கலைஞர் ஆட்சியில் துவக்கப்பட்டு, பின்னர் வந்த அரசால் கைவிடப்பட்ட விவசாய தொழிலாளர்கள் நல வாரியத்தை மீண்டும் அமைத்து விவசாய தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.
- பட்டியல், பழங்குடியினர்க்கு ஒதுக்கப்படும் சிறப்பு உட்கூறு திட்ட நிதியை மடைமாற்றம் செய்யக்கூடாது.
- சிறப்பு உட்கூறு திட்டத்தின் நிதியில் ஒன்றிய அரசு மூலம் கட்டப்பட்டு வரும் பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கு முழு மானியம் வழங்கி பட்டியலின மக்கள் வீடுகள் கட்ட நிதி ஒதுக்க வேண்டும்.
- ஒரு காலத்தில் நீர் நிலைகளாக/ நீர் வழிப்பாதைகளாக இருந்து, தற்போது பயனற்றுப் போன நிலங்களை, வகை மாற்றம் செய்து வேறு பயன்பாட்டுக்கு பயன்படுத்த வழிவகை காண வேண்டும்.
- நீர்நிலை புறம்போக்குகளில் பல ஆண்டுகளாக குடியிருந்து வருபவர்களை உச்சநீதி மன்ற தீர்ப்பை காட்டி வீடுகளை அகற்றுவதற்கு முன்பு குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பான வீடுகளை ஒதுக்கீடுசெய்து அதற்கு பின்னரே வீடுகளை காலிசெய்ய வேண்டும்.
- பினாமி பெயர்களில் மறைக்கப்பட்டுள்ள உபரி நிலங்களைக் கையகப்படுத்தி, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

### 11. வேண்டாம் விபி ஜி ராம் ஜி

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் மூலம், நாடு முழுவதும் உள்ள ஊரகப்பகுதி உழைக்கும் மக்களின் குடும்பங்கள் தலா ஆண்டுக்கு 100 நாள் வேலை பெறுவதை சட்டபூர்வ உரிமையாக பெற்றிருந்தன.
- இதனை நீக்கி, விபி கிராம் ஜி திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதை ரத்து செய்து விட்டு, வேலை வழங்கும் நாட்களை ஆண்டுக்கு 200 ஆக உயர்த்தியும், தினசரி குறைந்த பட்ச ஊதியமாக ரூ700/ வழங்கும் வகையில்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தை மீண்டும் அமலாக்க ஒன்றிய அரசை வலியுறுத்துவோம் .

**12. கைத்தறி, கயிறு, பாரம்பரியத் தொழில்கள்**

- கைத்தறி, கயிறு உள்ளிட்ட பாரம்பரிய தொழில்கள் இன்று நெருக்கடியின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ளன. நவ தாராளமய பொருளாதார கொள்கைகள், கட்டுப்பாடற்ற சந்தை ஆதிக்கம், பெரிய மூலதனக் கம்பெனிகளின் ஆதிக்கம், அவற்றுக்கு இசைவான ஒன்றிய அரசுக் கொள்கைகள் இணைந்து இந்த தொழில்களை முற்றாக அழிக்கும் பாதையில் தள்ளி விட்டுள்ளன.
- இயந்திரமய உற்பத்தி மற்றும் மலிவான இறக்குமதி பொருட்கள் மூலம் சந்தையை கைப்பற்றும் கார்ப்பரேட் சக்திகள், பாரம்பரிய உழைப்பை அடிப்படையாகக் கொண்ட சிறு உற்பத்தியாளர்களை முற்றாக ஒதுக்கி விடுகின்றன. இதன் விளைவாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பு, கடன் சுமை, வறுமை மற்றும் இடப்பெயர்வு ஆகியவற்றை எதிர்கொண்டு வருகின்றனர். இது வெறும் பொருளாதார நெருக்கடி அல்ல; உழைக்கும் மக்களின் மரியாதை மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் மீதான தாக்குதலாகும்.
- கைத்தறி மற்றும் கயிறு பொருட்களுக்கு சட்டபூர்வமான குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) நிர்ணயித்து, உற்பத்தியாளர்களின் உழைப்புக்கு நியாயமான விலை உறுதி செய்ய வேண்டும்.
- அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில், கைத்தறி துணிகள். இயற்கை கயிறு பொருட்கள் பயன்பாடு கட்டாயமாக்கப்பட வேண்டும். இது சந்தையை உழைப்பாளிகளுக்காக உறுதி செய்யும் அடிப்படை நடவடிக்கை ஆகும்.
- இடைத்தரகர் மற்றும் வணிக நடுவர் ஆதிக்கத்தை முறியடிக்க, தொழிலாளர் கூட்டுறவுகள், உற்பத்தியாளர் சங்கங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.
- சிறு உற்பத்தியாளர்களுக்கு, கடன் தள்ளுபடி, வட்டி இல்லாக் கடன், மூலப்பொருள் மானியம் வழங்கப்பட வேண்டும்.
- முழுமையான இயந்திரமயத்தை திணிப்பதற்கு பதிலாக, உழைப்பை மாற்றாத உற்பத்தி திறனை உயர்த்தும் சமநிலை தொழில்நுட்ப உதவி வழங்கப்பட வேண்டும்.
- கைத்தறி மற்றும் கயிறு தொழிலாளர்களுக்கு, ஓய்வூதியம், முழுமையான மருத்துவ காப்பீடு, விபத்து பாதுகாப்பு உரிமையாக வழங்கப்பட வேண்டும்.
- கார்ப்பரேட் ஆதிக்கத்திற்கு எதிராக, மலிவான இறக்குமதி பொருட்கள் மற்றும் கார்ப்பரேட் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த, இறக்குமதி கட்டுப்பாடு சிறு உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பு அமல்படுத்தப்பட வேண்டும்.
- இளம் தலைமுறையினர் இந்தத் தொழில்களில் தொடர்வதை ஊக்குவிக்க, பயிற்சி, ஊக்கத் தொகை, ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

## 13. மீனவர் நலன்

- தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை ராணுவம் படுகொலை செய்வது, படகுகளை கைப்பற்றி எடுத்து செல்வது, சேதப்படுத்துவது, வலைகளையும் பிடித்த மீன்களையும் அபகரிப்பது போன்ற தீயச் செயல்களைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- அரசு அறிவித்துள்ள மீன்பிடி தடைகாலத்துக்கு மாதம் ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும்.
- கடலில் படகில் சென்று மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மட்டுமின்றி, மீன் பிடித்தல், விற்பனை செய்தல் தொடர்புடைய ஆண், பெண் அனைவருக்கும் இந்நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.
- மீனவர், மீன்பிடித் தொழிலை அழிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள தேசிய மீன்வளக் கொள்கை வரைவு 2020 சட்ட முன்வடிவை திரும்பப் பெற ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தரப்பட வேண்டும்.
- மீன் தொழில் செய்யும் அனைவரையும் கூட்டுறவு சங்கத்திலும், மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்த்து, அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.

## 14. வேலைவாய்ப்பு - இளைஞர் நலன்

- தமிழ்நாட்டின் இளைஞர்கள் நாட்டின் உற்பத்தி வலிமையும் சமூக மாற்றத்தின் முதன்மை சக்தியுமாக உள்ளனர். அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் சமத்துவ உரிமைகள் உறுதி செய்யப்படாத வரை மாநிலத்தின் முழுமையான முன்னேற்றம் சாத்தியமில்லை.
- வேலைவாய்ப்பு ஒரு அடிப்படை உரிமையாக அறிவிக்கப்பட வேண்டும். மாவட்ட வாரியாக தொழில் வளர்ச்சி மையங்கள் அமைப்பதோடு, தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த, உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கும் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.
- திறன் மேம்பாடு - மாநில பொறுப்பு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அனைத்து இளைஞர்களுக்கும் இலவச மற்றும் தரமான திறன் பயிற்சி வழங்கப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பம் (ஐடி), செயற்கை நுண்ணறிவு (ஏஐ), பசுமை ஆற்றல் போன்ற எதிர்காலத் துறைகளில் சிறப்பு பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- உயர்கல்வி பாடத்திட்டங்கள் தொழில் தேவைகளுடன் இணைக்கப்பட வேண்டும். அனைத்து அரசு மற்றும் அரசு உதவி கல்லூரிகளில் வேலைவாய்ப்பு மையங்கள் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெறும் அனைத்து தேர்வுகளும் காலவரையறைக்குள் நடத்தப்பட வேண்டும். அரசுப் பணியாளர் ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.
- ஸ்டார்ட்அப் மற்றும் சுயதொழில் மூலம் இளைஞர்களுக்கு வட்டி இல்லா கடன், தொடக்க நிதி, தொழில் வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும். பெண்கள் மற்றும் பின்தங்கிய சமூக இளைஞர்களுக்கு தனி ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.
- கிராம இளைஞர் முன்னேற்றம் ஒவ்வொரு தொகுதியிலும் "இளைஞர் வள மையங்கள்" அமைத்து, கிராம அடிப்படையிலான தொழில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். வேளாண்மை மற்றும் தொடர்புடைய தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். விவசாய விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்ட பதப்படுத்தல் உள்ளிட்ட பல்வகைத் தொழிற்சாலைகளை கிராமங்களையொட்டி துவக்கி, விவசாயப் பொருட்கள் வீணாகாது காப்பதோடு, கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பும் அதிகரிக்கப்பட வேண்டும்.
- சமூகநீதி, சமத்துவம் வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் ஒதுக்கீட்டு கொள்கைகள் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூக இளைஞர்களுக்கு சம வாய்ப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.
- வேலை இல்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டம் உடனடியாக அறிமுகப்படுத்தப்பட்டு, மாதம் ரூபாய் 5000 வழங்க வேண்டும்; அவர்கள் பட்டதாரிகளாக இருந்தால் ரூபாய் 7500 நிவாரணம் வழங்க வேண்டும்.
- விளையாட்டு மற்றும் உடல்நலம் மாவட்ட அளவில் நவீன விளையாட்டு வளாகங்கள் அமைத்து, இளைஞர்களின் உடல் மற்றும் மனநலத்திற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- அனைத்து இளைஞர்களுக்கும் டிஜிட்டல் திறன் கட்டாயமாக கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். 'கிக்' பொருளாதாரம் உள்ளிட்ட புதிய வேலைவாய்ப்பு வடிவங்களுக்கு சட்டபூர்வ பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். போக்குவரத்து கழகங்களை பயன்படுத்தி கடிதங்கள் ஆவணங்களை பரிமாறிக் கொள்ளும் 'கொரியர் சர்வீஸ்' அமைத்து அதில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டும்.
- தனியார் மற்றும் ஒன்றிய, மாநில அரசு பணிகளுக்கான இலவச பயிற்சி மையங்கள் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் உருவாக்கப்படட வேண்டும்.
- தகுதியுள்ள இளைஞர்களுக்கு புதிய தொழில் தொடங்குவதற்கான பயிற்சி அளித்து, தொழில் துவங்க குறைந்த வட்டியில் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்பட வேண்டும்.

- தமிழ்நாட்டில் ஒன்றிய அரசுப்பணிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அதிக முன்னுரிமை தந்து பணி நியமனம் செய்ய வேண்டும்.

**15. கல்வி – மாணவர் நலன்**

- இந்திய அரசமைப்புச் சட்டம், இந்தியாவை ஒரு நாடாக வரையறுக்காமல், மாநிலங்களின் ஒன்றியமாகவே வரையறுக்கிறது. பெரும்பாலும் மொழிவழி மாநிலமாக அமைந்துள்ள நிலையில், நாடு முழுமைக்குமான ஒற்றை தேசியக் கல்விக் கொள்கை திணிக்கப்படுவது தவறாகும்.
- இது வெறும் இந்தி, சமஸ்கிருத மொழித் திணிப்பு மட்டுமின்றி, ஒரு பண்பாட்டுப் படையெடுப்புமாகும். அரசமைப்புச் சட்டத்தின் 8வது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 22 மொழிகளை அழிப்பதற்கு எடுக்கப்படும் திட்டமிட்ட நடவடிக்கையாகும்.
- தேசியக் கல்விக் கொள்கை 2020, திருத்தி மாற்றத்தக்கதாக இல்லை; முற்றிலுமாக புறக்கணிக்கப்பட வேண்டியதாக உள்ளது. எனவே தமிழகத்தில் தேசியக் கல்விக் கொள்கை 2020 செயற்படுத்தப்படாமல் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும்.
- பொதுப்பட்டியலில் கல்வி உள்ளதால், அதையே காரணமாகக் கொண்டு கல்வித் துறையில் மாநிலங்களைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டு, மத்திய அரசே ஆக்கிரமித்துக் கொள்வதை ஏற்க இயலாது. பொதுப்பட்டியலிலுள்ள கல்வியை, மாநிலப்பட்டியலுக்கு கொண்டு வருவதற்கு அரசமைப்பு சட்டத்தைத் திருத்தியமைக்க சட்டப்படியான, அரசியல் ரீதியான, செயற்பூர்வமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பன்னிரெண்டு ஆண்டு படித்து, பெற்ற மதிப்பெண்கள் உயர்கல்வி பெற போதாது என்றும், ‘நீட்’ எனும் ஒரே ஒரு தேர்வின் மூலம் மட்டுமேதான் உயர்கல்விக்கு நுழைய முடியும் என்றும் கூறுவது அநீதியாகும். இது சமூக நீதியையும், சமத்துவத்தையும் குழிதோண்டிப் புதைப்பதாகும். எனவே மருத்துவம் உள்ளிட்ட எந்த உயர்கல்விக்கும் தேசிய தகுதி நுழைவுத் தேர்வு அவசியமானதல்ல எனும் முறைமையை தமிழ்நாட்டில் உருவாக்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- தமிழ்நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உரிய இடம் வழங்க வேண்டும் என்று கோருவது சலுகை அல்ல; அது ஒரு உரிமைக் கோரிக்கை ஆகும்.
- தமிழகத்தில் உள்ள தேசிய சட்டப்பள்ளி, திருவாரூர் மத்திய பல்கலைக் கழகங்களில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு 50 சதவீத இடங்கள் என்று உச்சபட்சம் பெற்று இருப்பதை மாற்றி, வேறு மாநிலங்களில் உள்ளதை போல 70 சதவீதம் வரை தமிழ்நாட்டு மாணவர்களுக்கு இடம் வழங்க வேண்டும்.

- ஐஐஎம், ஐஐடி போன்ற நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு குறைந்தபட்சம் 50 சதவீத மாநில ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.
- மாநில அரசு பள்ளிகளில் கல்வி பெற்ற மாணவர்களுக்கு தனிப்பட்ட முன்னுரிமை அளிக்கும் சேர்க்கை நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.
- கட்டாய கல்வி உரிமைச் சட்டம் வழியாக, தனியார் கல்வி நிலையங்களில், 25 சதவீத மாணவர்களை அரசு செலுத்தும் சலுகை கட்டணத்துடன் சேர்க்க வேண்டும் என்றாலும், ஒன்றிய அரசு சரியாக கட்டணத்தை செலுத்துவதில்லை என்பதைப் பயன்படுத்தி தனியார் கல்வி நிறுவனங்கள் அந்தச் சட்டத்தை மீறுகின்றன. இவற்றை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- மாநிலங்களின் உரிமைகளையும் கூட்டாட்சி அமைப்பின் சமநிலையையும் மதிக்கும் வகையில் உயர்கல்வி சேர்க்கை கொள்கையில் அடிப்படை மாற்றம் செய்ய வேண்டும்.
- மாநிலத்திலுள்ள கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கொண்ட குழுவை நியமித்து மாநிலத்திற்கென்று தனிக் கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டும். கல்வி முற்றிலும் வணிக மயமாகி வருவதைத் தடுக்க பொருத்தமான திட்டம் தயாரித்து செயல்படுத்தப்பட வேண்டும்.
- மாணவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் மாணவர் பேரவைத் தேர்தல்கள் அனைத்து கல்வி வளாகங்களிலும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனைத்து மட்டங்களிலும் இட ஒதுக்கீட்டின் மூலம் மாணவர்களை சேர்க்கவும், ஆசிரியர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோரை நியமிக்கவும் உறுதி செய்ய வேண்டும்.
- ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் தாய்மொழி வழியிலான கல்வியை வழங்க உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- சென்னை, மதுரை, திருச்சியைப் போல் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு நூலகங்கள் நிறுவப்பட வேண்டும்.
- அனைத்து அரசு கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர் காலிப் பணி யிடங்களை நிரப்பி, தற்காலிக ஆசிரியர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும்.
- அரசுப் பள்ளிக் கட்டமைப்பையும், கல்வித் தரத்தையும் உயர்த்த வேண்டும். குடிமை பயிற்சியை மீண்டும் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

- மாணவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கற்றல் சூழல் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையிலான விடுதிகளை மேம்படுத்தி, மாணவர்களுக்கான உணவுப் படியினை மாதந்தோறும் ரூ.4,500ஆக உயர்த்த வழி செய்யப்பட வேண்டும்.
- ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு ஒன்றிய அரசு Junior Research Fellowship கல்வி ஊக்கத் தொகை வழங்குவது போல மாநில அளவில் ஆராய்ச்சிப் படிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் ஊக்குவிக்கும் விதமாக மாநில அரசு கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும்.

**16. மாதர் நலன்**

- சட்டப் பேரவை, நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு செய்வதற்கான சட்டம் இயற்ற உறுதியான முயற்சி எடுக்கப்பட வேண்டும்.
- தமிழக மாநில மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த, போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். பாலின சமத்துவ பார்வையும் சமூக அக்கறையும் கொண்டவர்கள் மாநில மகளிர் ஆணைய தலைவராக, உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும்.
- குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குறுகிய கால தங்கும் விடுதிகள் மாவட்டங்கள் தோறும் அமைக்கப்பட வேண்டும்.
- மதுவிற்பனை படிப்படியாகக் குறைக்கப்பட்டு பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும்.
- குடிநோயாளிகளை மீட்பதற்கான மறுவாழ்வு மையங்கள் மாவட்டந்தோறும் உருவாக்கப்பட வேண்டும்.
- கணவரை இழந்தவர்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், திருமணமாகாமல் தனித்து வாழும் பெண்களுக்கு, ஆண்பிள்ளைகள் இருந்தாலும் மாதம் ரூபாய் 5,000 உதவித் தொகை வழங்கப்பட வேண்டும்.
- சைபர்கிரைம் குற்றங்களை தடுக்க சிறப்பு சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.
- அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் 6 மாத காலத்திற்குள் உள் புகார் குழு மற்றும் மாவட்ட அளவிலான உள்ளூர் புகார் குழுக்கள் அமைப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடைச்சட்டம் 2013ஐ முறையாக அமல்படுத்த போதிய நிதிஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். பணியிடங்களில் பாலியல் வன்முறையை தடுக்கும் சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து நிறுவன ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும்.
- அரசு வங்கிகளில் சுயஉதவிக் குழு பெண்களுக்கு 4 சத வட்டி விகிதத்தில் கடன் வழங்க வேண்டும்.

- சுயஉதவிக்குழு பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை அரசே கொள்முதல் செய்து அவற்றுக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும்.

## 17. குழந்தைகள் நலன்

- குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவது சட்ட விரோதம் ஆகும். ஆனாலும் தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை பரவலாக நடைமுறையில் உள்ளது. இதனைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- 3 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி, அரசாங்கத்தின் தொடக்க நிலைப் பள்ளிகளோடு இணைக்கப்பட வேண்டும். சிறப்புப் படிப்புத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் இதற்கென நியமிக்கப்பட வேண்டும்.
- போக்சோ சட்டத்தை முறையாகச் செயல்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- ஆண், பெண் குழந்தை பிறப்பில் சதவிகிதம் சரிந்து கொண்டு வருகிறது. கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா எனக் கண்டறிவது தண்டனைக்குரிய குற்றம் எனினும் நடைமுறையில் இது மீறப்படுகிறது. இதனைத் தடுத்து சட்டத்தை உறுதியோடு அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அங்கன்வாடி மையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, குழந்தைகள் நல்வாழ்வு, உடல் வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாட்டுக்கு வாய்ப்பளிக்கும் மையங்களாக மாற்றப்பட வேண்டும். இப்பணிகள் தனியார், தொண்டு நிறுவனங்களிடம் தராமல், திட்ட ஊழியர்களுக்கு, தொழிலாளர் தகுதி வழங்கப்பட வேண்டும்.
- தனியார் அஞ்சல் ஊழியர், தகவல் தொழில் நுட்பம், வீடுகளிலிருந்து வேலை செய்வோர், பாதுகாவல் பணி, உணவு எடுத்துச் செல்வோர் உள்ளிட்ட தொழில்களில் உதிரிகளாகத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதைத் தடுத்து, பதிவேடுகளில் பொருந்தச் செய்து உரிய ஊதியம் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- விபத்துகளில் தாய் தந்தையை இழந்த குழந்தைகளின் கல்விச் செலவுகள், பராமரிப்புகளை அரசே ஏற்க வேண்டும்.

## 18. ஒடுக்கப்பட்ட சமூகங்கள் உயர்வடைய..

- பட்டியலின சமூகத்தின் முன்னேற்றம் என்பது ஒரு நலத்திட்டக் கேள்வி மட்டுமல்ல; அது சமூகநீதி, சமூக வாழ்வில் மெய்யான ஜனநாயகம் தழைத்தல் மற்றும் மனித கண்ணியத்தின் அடிப்படை அரசியல் கேள்வியாகும். நிலம், கல்வி, வேலைவாய்ப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் வலுவான அரசுத் தலையீடு மட்டுமே சாதி அடக்குமுறையை முறியடித்து சமத்துவமான தமிழ்நாட்டை உருவாக்கும்.

- பட்டியலின குடும்பங்களுக்கு நில உரிமை வழங்குவது அரசின் முதன்மை பொறுப்பாக அறிவிக்கப்பட வேண்டும். பஞ்சமி நிலங்களை மீட்க தனி ஆணையம் அமைத்து, நிலமற்ற தலித் குடும்பங்களுக்கு விவசாய நிலம் வழங்கப்பட வேண்டும்.
- பட்டியலின மாணவர்களுக்கு இலவச மற்றும் தரமான கல்வி உறுதி செய்யப்பட வேண்டும். பள்ளி முதல் உயர்கல்வி வரை scholarship, hostel, stipend ஆகியவை முழுமையாக வழங்கப்பட வேண்டும்.
- அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் ஒதுக்கீட்டு பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும். ஒப்பந்த வேலைகளை நிரந்தரப்படுத்தி, தலித் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- பட்டியலின இளைஞர்களுக்கு வட்டி இல்லா கடன், மானியம் வழங்கி தொழில் தொடங்க ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். அரசு ஒப்பந்தங்களில் குறைந்தது 25% ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.
- சட்ட பாதுகாப்பு – கடுமையான அமலாக்கம் Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 முழுமையாகவும் கடுமையாகவும் அமல்படுத்தப்பட வேண்டும். தலித் மீதான வன்முறைகள் தொடர்பான வழக்குகள் விரைவு நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டும்.
- குடியிருப்பு மற்றும் அடிப்படை வசதிகள் பட்டியலின குடியிருப்புகளுக்கு தரமான வீடுகள், குடிநீர், சாலை, கழிவுநீர் வசதிகள் வழங்கப்பட வேண்டும். "சேரி – ஊர்" பிரிவினையை முறியடிக்கும் ஒருங்கிணைந்த குடியிருப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- பட்டியலின பெண்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். பாலியல் வன்முறை வழக்குகளில் விரைவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- உள்ளாட்சி மற்றும் சட்டமன்றங்களில் ஒதுக்கீட்டு முறையை வலுப்படுத்தி, நிர்வாக அமைப்புகளில் பட்டியலின சமூகத்தின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.
- சாதி அடிப்படையிலான பாகுபாட்டை முறியடிக்கும் விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும். பாடத்திட்டங்களில் சமூகநீதி மற்றும் சமத்துவம் கட்டாயமாக சேர்க்கப்பட வேண்டும்.
- பட்டியலின முன்னேற்றத்திற்கான அனைத்து திட்டங்களையும் கண்காணிக்க மாநில அளவில் தனி ஆணையம் அமைத்து, வருடாந்திர அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும்.

## 19. பழங்குடிகளைப் பாதுகாக்க...

- பழங்குடியினர் முன்னேற்றம் என்பது "மேம்பாடு" என்ற பெயரில் அவர்களை இடம்பெயர்த்தல் அல்ல; அவர்களின் உரிமைகளை அங்கீகரித்து, தன்னாட்சியுடனும் கண்ணியத்துடனும் வாழும் சூழலை உருவாக்குவதே உண்மையான சமூகநீதி.
- காடு மற்றும் நில உரிமைகள் சட்டம், 2006 முழுமையாக அமல்படுத்தி, பழங்குடியினருக்கு தனிநபர் மற்றும் சமூக காடு உரிமைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.
- காடு சார்ந்த பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கி, அரசு நேரடி கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- தமிழ்நாட்டில் மொத்தம் 36 பழங்குடி இனங்கள் அதிகாரப்பூர்வமாக பட்டியலிடப்பட்டுள்ளன. அவர்கள் பழங்குடியினராக இருந்தும் அதற்குரிய அரசுச் சான்றிதழ் பெறுவது மிகக் கடுமையானதாக மாற்றப்பட்டுள்ளது. இதனை எளிமைப்படுத்தி உடனுக்குடன் சான்றிதழ் வழங்கவும் அதன் மூலம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்கள் தடங்கல் இன்றி வழங்கப்படவும் உறுதி செய்ய வேண்டும்.
- பழங்குடி மொழியில் கல்வி, தங்கும் விடுதி, ஸ்காலர்ஷிப் ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும். மலைப்பகுதிகளில் மொபைல் மருத்துவ சேவைகள் விரிவாக்கப்பட வேண்டும்.
- குடிநீர், மின்சாரம், சாலை போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்; கட்டாய இடமாற்றம் நிறுத்தப்பட வேண்டும்.
- பழங்குடி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தனித்துவமான பாதுகாப்பு மற்றும் முன்னேற்ற திட்டங்கள் அமல்படுத்தப்பட வேண்டும்.
- பழங்குடி மொழி, கலை, பாரம்பரிய வாழ்வியல் பாதுகாக்கப்பட வேண்டும். பழங்குடிகளுக்கு என தமிழ்நாடு அரசு தனி நலத்துறையை உருவாக்க வேண்டும்.

## 20. மூத்த குடிமக்கள் நலன்

- தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. திராவிட முன்னேற்ற கழக அரசு இத்துறையில் பயனுறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. எனினும் முதிர்ந்த வயதுள்ள குடிமக்களின் பாதுகாப்பை வெறும் உதவித்தொகையோ அல்லது மருத்துவ உதவிகளோ மட்டுமே உறுதி செய்துவிட முடியாது.
- '108' ஆம்புலன்ஸ் சேவை போல, முதியோர்களுக்கென '14567' (Elderline) சேவையை இன்னும் வலுப்படுத்த வேண்டும்.

- தனியாக வசிக்கும் முதியவர்களின் வீடுகளில் ‘Smart Panic Buttons’ எனப்படும் அவசர கால பொத்தான்களை அரசு மானிய விலையில் பொருத்தி, அதை அருகில் உள்ள காவல் நிலையத்துடன் இணைக்கலாம்.
- வங்கிச் சேவைகள் முதல் அரசுச் சான்றிதழ்கள் வரை அனைத்தும் டிஜிட்டல் மயமாகிவிட்டன. இது பல முதியவர்களுக்குப் பெரும் சுமையாக உள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து அல்லது வார்டு அலுவலகத்திலும் ‘டிஜிட்டல் வழிகாட்டிகள்’ நியமிக்கப்பட வேண்டும். இவர்கள் முதியவர்களுக்குத் தங்குதடையின்றி ஆன்லைன் சேவைகளைப் பெற உதவ வேண்டும்.
- சொத்து விவகாரங்களில் முதியவர்கள் ஏமாற்றப்படுவது தொடர்கிறது. தற்போதுள்ள தீர்ப்பாயங்கள் (Tribunals) வழக்குகளை முடிக்க நீண்ட காலம் எடுத்துக் கொள்கின்றன.முதியோர் தொடர்பான வழக்குகளை முடிக்க ‘விரைவு நீதிமன்றங்கள்’ அல்லது சிறப்புத் தீர்ப்பாயங்கள் மாவட்டம் தோறும் அமைக்கப்பட வேண்டும்.
- தனியாக வசிக்கும் முதியவர்களைக் கண்காணிக்க ‘Neighbours Watch’ போன்ற தன்னார்வலர் குழுக்களைக் காவல்துறையின் மேற்பார்வையில் உருவாக்கலாம்.
- பேருந்துகளிலும், சென்னை மெட்ரோவிலும், மின்சார ரயில்களிலும் மூத்த குடிமக்கள் அமர்வதற்கான இருக்கைகள் வாசலுக்கு அருகில் ஒதுக்கப்பட வேண்டும். அந்த இருக்கைகள் அவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- ஏறுவதற்கு வசதியாக தாழ்தளப் பேருந்துகளைக் கிராமப்புறங்களுக்கும் நீட்டிக்க வேண்டும்.
- பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்புச் சட்டத்தில் (Maintenance Act), பிள்ளைகள் பராமரிக்கத் தவறினால் வழங்கப்படும் தண்டனை மற்றும் அபராதத் தொகையைத் தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப உயர்த்த வேண்டும்.
- தற்போதுள்ள மூத்த வயதுள்ளவர்களுக்கான ஓய்வூதியத் தொகையை உயர்த்த வேண்டும். எழுபது வயதைத் தாண்டிய, மூத்த குடிமக்களுக்கு மாதம் ரூபாய் 5,000 உதவித்தொகை வழங்க வேண்டும்.

### 21. மருத்துவம்

- நவீன மருத்துவத் தொழில் நுட்ப வசதிகள் அனைத்து மக்களுக்கும் கிடைத்திட மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரிகளை அரசு துவக்க வேண்டும்.
- 15 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் 2,500 மக்கள் தொகைக்கு ஒரு சுகாதார மற்றும் நலவாழ்வு மையம் அமைக்கப்பட வேண்டும்; அவற்றில் நவீன மருத்துவ அறிவியல் சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும்.

- போலி அறிவியலையும், இந்தி, சமஸ்கிருத திணிப்பையும் தடுத்து, மருத்துவ அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியை பாதுகாத்திட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.
- அனைத்து குழந்தைகளுக்கும்,பேறுகால தாய்மார்களுக்கும் தடுப்பூசி கிடைப்பதையும், அரசு மருத்துவமனைகளில் அனைவருக்கும் தரமான இலவச சிகிச்சைகள், பரிசோதனைகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து வகை மருத்துவர்கள் உட்பட, மருத்துவத் துறை பணியாளர்கள் அனைவருக்கும் பணி நிரந்தரம் வழங்கப்பட வேண்டும்.
- தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இளநிலை,முதுநிலை, உயர் சிறப்பு மருத்துவ இடங்களுக்கும் நீட் நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு பெறவும், தனியார் நிகர் நிலை மருத்துவப் பல்கலைக் கழகங்களிலும் இட ஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்தவும், மாநிலத் தொகுப்பிற்கு 50 விழுக்காடு இடங்களைப் பெறவும், அரசுப்பள்ளி மாணாக்கர்களுக்கான உள் ஒதுக்கீட்டை 7.5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக உயர்த்தவும், அரசு உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு தனியாக 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கவும் வேண்டும்.

## 22. பத்திரிக்கையாளர் நலன்

- நீதியரசர் மஜிதியா குழு தலைமையில் 2011 ஆம் ஆண்டிலேயே நிர்ணயித்த பத்திரிகையாளர்களுக்கான ஊதிய விகிதத்தை, இன்னும் செயல்படுத்தாத பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்கள், அமல்நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தமிழ்நாடு அரசின் தொழிலாளர் துறையின் கீழ் அமைக்கப்பட வேண்டிய முத்தரப்பு குழுவான, பத்திரிக்கையாளர் ஊதிய விகித செயலாக்க கண்காணிப்புக் குழுவை புனரமைத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்
- புதிய ஊதியக் குழு அமைக்கப்பட ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு அழுத்தம் தர வேண்டும்.
- காட்சி ஊடகத்துறையில் பணிபுரியும் வடிவமைப்பாளர்கள் (டிசைனர்), படத்தொகுப்பாளர்கள் (விஷுவல் எடிட்டர்), ஒளிப்பதிவாளர்கள் (கேமராமேன்) உள்ளிட்டோருக்கும் ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- பத்திரிகையாளர்கள் ஓய்வூதிய விண்ணப்ப முறையில் உள்ள குறைபாடுகளை நீக்குவதோடு, நடைமுறைக்கு பொருந்தாத வருமான உச்சவரம்பை மாற்றி அமைக்க வேண்டும்.

- பணியின் போது உயிரிழந்த பத்திரிகையாளர்களின் குடும்ப நல நிதியுதவித் திட்டத்தில், பணி புரிந்த ஆண்டுகளை கணக்கில் கொள்ளாமல் நிதியுதவி வழங்க வேண்டும்.
- பத்திரிக்கையாளர் நல வாரியத்தை, பத்திரிகையாளர்களின் அனைத்து நலத்திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் அமைப்பாக மாற்ற வேண்டும்.

### 23. மது-போதை மீட்பு மையங்கள்

- தமிழ்நாட்டில் மது மற்றும் போதைப்பொருள் பிரச்சினையை கட்டுப்படுத்த பல்துறை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- டாஸ்மாக் கடைகள் மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தி, சட்டவிரோத சாராயம் மற்றும் போதைப்பொருள் விற்பனைக்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனைத்து மாவட்டங்களிலும் மீட்பு (டி-அடிக்ஸன்) மையங்கள், மனநல சேவைகள் மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- பள்ளி, கல்லூரி, தொழிலாளர் பகுதிகளில் விழிப்புணர்வு மற்றும் கல்வி இயக்கங்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.
- சமூகபொருளாதார காரணிகளை சரிச்செய்து, நீண்டகால மதுவிலக்கு கொள்கை நோக்கில் அரசு செயல்பட வேண்டும்.

### 24. ஊழல் தடுப்பு

- தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018, உரிய வகையில் திருத்தப்பட்டு தன்னதிகாரம் கொண்ட அமைப்பாக மாற்றி, வழக்குகளை விசாரணை செய்ய சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும்.
- பொது ஊழியர்கள், அவர்களது கணவன்/மனைவி மற்றும் சார்ந்தோரின் சொத்து விபரங்கள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் 30ல் சமர்ப்பிக்கவும், அது வலைத்தளங்களில் வெளியிடுவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.
- தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில், அதன் நோக்கங்களை சிதைக்கும் வகையில் ஒன்றிய அரசு கொண்டு வந்த திருத்தங்களைத் திரும்பப் பெற உரிய அழுத்தம் தரப்பட வேண்டும்.
- தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி அரசுத் துறைகள் பெரும்பாலான பொதுத் தகவல்களை இணைய தளத்தில் வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- உறுதியான காலவரையறைக்கு உட்பட்ட அரசு சேவை; வெளிப்படையான, பொறுப்புள்ள, காலவரையறைக்குட்பட்ட குறைதீர்ப்பு வழிமுறை; புகார்களைக் கண்காணிக்கவும், தீர்க்கவும், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்கவும், தன்னதிகாரம் கொண்ட அமைப்பை உருவாக்குதல் ஆகியவை மீது தனிக் கவனம் செலுத்தி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இணைய வழி சேவை, தகவல் பகிர்தல் மூலம் ஊழல் மற்றும் லஞ்சத்தை வெகுவாகக் குறைக்க, ஒருங்கிணைந்த மின் ஆளுமைத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதில் முன்முயற்சி எடுப்பவர்கள் (whistle blowers) பாதுகாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக 2014ல் இயற்றப்பட்ட சட்டம், பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களைப் பாதுகாக்கக் கூடியதாக இல்லாதது மட்டுமின்றி, சரியாக அமலாக்கப் படாமலும் உள்ளது. உரிய திருத்தங்களைச் செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்துவதோடு, தமிழகத்திலும் உரிய பாதுகாப்புத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அரசியல் மற்றும் ஆதிக்க சக்திகளின் பிடியிலிருந்து காவல்துறையை விடுவித்து, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தும் அமைப்பாக மாற்றுவதற்கு காவல்துறையில் பயிற்சி முறை உட்பட உரிய சீர்திருத்தங்கள் கொண்டு வரவேண்டும்.

### 25. கொடுங்கோன்மைச் சட்டங்கள்

- தடா, பொடா போன்ற கொடூரச் சட்டங்கள் நீக்கப்பட்ட பிறகு அவற்றிலிருந்த மோசமான அம்சங்களைத் தொகுத்து ஊபா (UAPA) சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.
- மேலும் தேசத்துரோகச் சட்டம், தேசிய புலனாய்வு முகமை போன்றவையும் சேர்ந்து பிணையில் வெளிவர இயலாமல் சிறையில் அடைக்கும் போக்கு தொடர்கிறது.
- இச்சட்டங்களின் மூலம் இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பலர் அரசு வன்கொடுமைத் தாக்குதலுக்கு ஆளாகி வருகிறார்கள்.
- அரசமைப்பு சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் உள்ள இந்தக் கொடுங்கோன்மைச் சட்டங்களை தமிழ்நாட்டில் செயற்படுத்த முடியாது என நிலைப்பாடு எடுத்து, அறிவிக்க வேண்டும்.

### 26. இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டம்

- இந்தியாவின் மதச்சார்பின்மைக்கும், பன்மயப் பண்பாட்டிற்கும் எதிராக இயற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு போன்றவை தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்படாத வகையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

### 27. சிறுபான்மையினர் நலன்

- ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் சங்கப் பரிவாரக் கும்பல்களின் தீச்செயல்களில் இசுலாமிய, கிறித்தவ பெயர் அடையாளத்தோடு வாழ்வதே ஆபத்தானது என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அச்சநிலையிலிருந்து அவர்களை

மீட்டெடுக்க சமூக நல்லிணக்கத்தை நேசிக்கும் அனைத்துத் தரப்பு மக்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்.

- சச்சார் கமிஷன் பரிந்துரைகள் தமிழ்நாட்டில் முழுமையாக அமலாக்கப்பட வேண்டும்.
- விசாரணைக் கைதி என்ற பெயரில் பல்லாண்டுகளாக சிறை வைக்கப்பட்டுள்ள அப்பாவி இஸ்லாமிய சிறைவாசிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.
- திரைப்படங்களில் தீயவர்களாக, வில்லன்களாக சித்தரிக்கப்படும் கதாபாத்திரங்களுக்கு முஸ்லீம் பெயர் வைப்பதை சென்சார் போர்டு கண்டறிந்து தடுக்க வேண்டும்.

### 28.வெளிப்படையான நிர்வாகம்

- அரசுத் துறை நிர்வாகம், மக்களுக்கு பதில் சொல்லும் கடமையை, உறுதிப்படுத்த, பொதுத் தகவல் அனைத்தும் வலைதளங்களில் உடனுக்குடன் வெளியிட வேண்டும்.
- பொது மக்கள் அலைகழிக்கப்படாமல், அவமதிக்கப்படாமல் ஊழலின்றி சேவை வழங்கும் வகையில் அரசு அலுவலகங்கள் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 29. உள்ளாட்சி நிர்வாகம்

- அரசின் வருவாயில் 30% நிதி உள்ளாட்சிகளுக்குத் தந்து, உள்ளாட்சியின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளவும் வழிவகை செய்ய வேண்டும்.
- உள்ளாட்சிகளில் ஊழலை ஒழிக்க சுயேச்சைத் தன்மையுடன், தண்டனை வழங்கும் அதிகாரத்துடன் இயங்கும் வழி வகையில் "புகார் விசாரணை ஆணையம்" உருவாக்க வேண்டும்.
- உள்ளாட்சிகளில் பெண்கள், பட்டியலின சமூகத்தினர், பழங்குடியினர் தங்களது அதிகாரங்களை யாருடைய தலையீடும் இன்றி பயன்படுத்த உத்தரவாதம் தரப்பட வேண்டும்.
- உள்ளாட்சி நிறுவனங்களின் பணியாளர்களை ஒப்பந்தத் தரகர், சுய உதவிக் குழுக்கள் மூலம் நிரந்தரமற்றவர்களாக நியமிக்கும் போக்கு கைவிடப்பட வேண்டும்.
- உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக. இப்போதும் தொடர்கிற கையால் மலம் அள்ளி அகற்றும் கொடுமையான முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.
- பல வடிவங்களில் நீடித்து வரும் தீண்டாமை கொடுமைகளை ஒழிக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்

- தலித், பழங்குடி மக்களுக்கான சிறப்பு உட்கூறு திட்டநிதி முறையாக, முழுமையாக பயனுறு முறையில் செலவிடப்பட வேண்டும்.
- மலக்குழிக்குள் இறங்கிப் பணிபுரிய வேண்டிய மனித இழிவு நடைமுறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்: இயந்திரப் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டும்.

## 30. குடியிருப்பு, மனை நிலம், மனைப் பட்டா

- வசிப்பிடம் இல்லாத குடும்பங்களுக்கு தலா 8 சென்ட் மனை நிலம் கிடைக்கவும், அடிப்படை வசதிகள் கொண்ட வீடுகள் கட்ட ரூ.6 லட்சம் நிதியும் கிடைக்க நடைமுறைகள் எளிமையாக்கப்பட வேண்டும்.
- பல்வேறு வகையான அரசு நிலங்களில் வசிக்கும் வீடற்ற மக்களுக்கு உரிய வகையில் பட்டா கிடைக்கவும், வீடில்லாதோருக்கு வீட்டுமனையும், வீடும் கிடைக்கச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 31. வீட்டு வாடகை, ஆவண மோசடி

- தமிழ்நாட்டில் வீடு மற்றும் மனை தொடர்பான பிரச்சனைகள் நாளுக்கு நாள் தீவிரமடைகின்றன. ஒரே நிலத்தை பலருக்கு விற்பனை செய்யும் இரட்டை ஆவண மோசடி, நில ஆக்கிரமிப்பு மற்றும் உள்ளூர் கும்பல் ஆதிக்கம், அங்கீகரிக்காத மனைகள் விற்பனை, வீட்டு வாடகை கட்டுப்பாடின்றி உயர்வு, மற்றும் நீண்டகால நில வழக்குகள் போன்றவை பொதுமக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் பாதிக்கின்றன.
- அனைத்து நிலங்களுக்கும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் பதிவு மற்றும் யூனிக் நில அடையாள எண் வழங்கி, இரட்டை விற்பனை மற்றும் போலி ஆவணங்களை முற்றிலும் தடுக்கும் முறைமை உருவாக்கப்பட வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு முழுமையான உரிமை உத்தரவாதம் வழங்கும் “Title Guarantee” சட்டம் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்..
- நில ஆக்கிரமிப்பு மற்றும் கும்பல் ஆதிக்கத்தை தடுக்க தனி சிறப்புப் படை அமைத்து கடுமையான சட்ட அமலாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- DTCP/CMDA அனுமதி இல்லாத மனைகள் விற்பனையைத் தடை செய்து, மீறுபவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.
- வீட்டு வாடகை உயர்வுக்கும், அது உயர்த்தப்பட வேண்டிய விகிதத்துக்கும் உச்சவரம்பு நிர்ணயம் செய்து, கட்டாய ஒப்பந்த முறையை அறிமுகப்படுத்தி வாடகையாளர்களை பாதுகாக்க வேண்டும்.
- நிலம் தொடர்பான வழக்குகளை விரைவாகத் தீர்க்க சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

- பொதுமக்கள் நிலம் வாங்கும் முன் சரிபார்க்கக்கூடிய ஆன்லைன் வசதிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**32. தேர்தல் சீர்திருத்தம்**

- ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல் செயல்முறை அல்ல; அது மக்களின் உண்மையான அரசியல் பிரதிநிதித்துவம், சமூகநீதியின் வெளிப்பாடு ஆகும்.
- தேர்தல் செயல்முறையில் பண ஆதிக்கம் அதிகரித்து, அரசியல் போட்டி சமநிலையற்றதாக மாறியுள்ளது. கார்ப்பரேட் நிதி, மறைமுக தேர்தல் நிதி முறைகள், வாக்குகளை 'வாங்குதல்' போன்றவை, தேர்தலை மக்கள் விருப்பத்தின் வெளிப்பாடாக இல்லாமல், பணத்தின் ஆதிக்கத்திற்குள் தள்ளி விட்டுள்ளன
- வாக்காளர்களுக்கு பணம் அல்லது பொருள் வழங்கும் செயல்களை கடுமையாகத் தடுக்க சட்ட நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்; கண்காணிப்பு அமைப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- மக்களின் ஒவ்வொரு வாக்கும் சமமான மதிப்பைப் பெறும் வகையில், கிடைத்த வாக்குகளில் அதிக வாக்குகள் பெற்றவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் தற்போதைய முறைக்கு மாற்றாக, இந்தியாவுக்குப் பொருந்தும் வகையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தல் நடத்தப்பட உரிய சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

**33.மனித, ஜனநாயக உரிமைகள்**

- காவல் சித்திரவதை, காவல் மரணம், சட்டவிரோத காவல் பலப்பிரயோகம், போலி மோதல் சாவுகள் அதிகரித்து கொண்டிருப்பதைத் தடுக்க உறுதியான செயல்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- தற்போதுள்ள பிரிட்டிஷ் காலனி காலத்திய காவல் சட்டத்தை நீக்கி, பொருத்தமான நிபுணர்களை நியமித்து, மக்களிடையே விவாதம் நடத்தி, மக்கள் கருத்துக்களின் அடிப்படையில் பரிந்துரை பெற்று, காவல் துறை சீர்திருத்தம் ஓராண்டுக்குள்ளாக உருவாக்கி செயற்படுத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு காவல் நிலையத்திலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, அவை இடையூறின்றி இயங்கவும், பதிவாகும் காட்சிகளை உயர் காவல்துறை அதிகாரிகள் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- அறவழியில், அமைதியான வகையில் ஊர்வலம், போராட்டங்கள் நடக்கும் போது, சட்டத்திற்கு புறம்பான பலப்பிரயோகங்களில் காவல்துறை ஈடுபடாமல், ஜனநாயக நெறிகளுக்கு உட்பட்டு ஒழுங்குபடுத்தும் பணியை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

- போராட்டம் நடத்துவோர், தலைக்கவசம், முகக் கவசம் அணிய மறந்தவர்கள், சாலை விதிகளை மீறுவோர் மீது பலப்பிரயோகம் செய்யாமல், காவலர்கள் சகிப்புத் தன்மையைப் பின்பற்றும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.
- பொது மக்கள் அமைதியாகக் கூடவும், சங்கம் சேர்வதற்குமான உரிமை முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அனுமதி கோரி இணைய வழியில் விண்ணப்பிக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டு, உடனடியாக பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- மாவட்ட ஆட்சியரகம், காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், சட்டப்பேரவை ஆகியவற்றின் முன்பு நூறுக்கு மேற்படாதவர்கள் கூடி, குறிப்பிட்ட நேரத்தில் போராட்டங்கள் நடத்த இடவசதி ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.
- மாநிலத்தில் உள்ள மனித உரிமை ஆணையம், பெண்கள் ஆணையம், சிறுபான்மையினர் ஆணையம், குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம், தகவல் ஆணையம் ஆகியவற்றில் காலியாக உள்ள பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.
- இந்த ஆணையங்கள் பெயரளவில் உள்ள நிலையை மாற்றி அவை நிறுவப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் செயலதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

### 34. பார்வையற்றோர், மாற்றுத் திறனாளிகள்

- பார்வையற்றோர் மாற்றுத் திறனாளிகளுக்கான சமூகப் பாதுகாப்பு நலவாரியத் திட்டங்களை ‘உதவி’யாகக் கருதாமல் உரிமையாகக் கொள்ள வேண்டும்.
- அரசு துறைகளில் 4% இடஒதுக்கீடு (RPWD சட்டப்படி) முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தனியார் துறையிலும் இந்த வேலை வாய்ப்பு ஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் தொடங்க வட்டி இல்லாக் கடன், இலவசமாக தொழில் கருவிகள், ஊக்கத் திட்டங்கள் வழங்கப்பட வேண்டும்.
- அரசு வணிக வளாகங்கள், கல்வி நிலையங்கள் உள்ளிட்டவற்றில் கடைகள் அமைப்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.
- மாற்றுத்திறன் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்குக் காலமுறை ஊதியம், பணி நிரந்தரம் வழங்கிட வலியுறுத்தப்படும்.

### 35. திருநங்கையர், திருநம்பியர் நலன்

- இந்திய அளவில் உள்ள Transgender Persons (Protection of Rights) Act, 2019 நடைமுறையில் பல குறைபாடுகளுடன் அமல்படுத்தப்படுகிறது.
- பாலின அடையாளத்தை அரசு அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டிய நடைமுறை, தனிநபர் சுய அடையாள உரிமையை பாதிக்கிறது.

- சட்டத்தில் கூறப்பட்டுள்ள தண்டனைகள் பலவீனமாக இருப்பதால், பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு போதுமானதாக இல்லை.
- வேலை, கல்வி போன்ற துறைகளில் கட்டாய ஒதுக்கீடு பற்றிய தெளிவான உத்தரவு இல்லை.
- மாநில அளவில் நலத்திட்டங்கள் இருந்தாலும், அவை சட்ட ரீதியாக உறுதி செய்யப்படாததால் செயல்பாட்டில் இடர்பாடுகள் உள்ளன.
- சட்டம் இருப்பினும், அது முழுமையான உரிமை பாதுகாப்பையும் சமத்துவத்தையும் உறுதி செய்யும் வகையில் தமிழ்நாட்டில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**36. கோவில் மனையில் குடியிருப்போர்**

தமிழ்நாடு முழுவதும் பரவி உள்ள லட்சக்கணக்கான கோயில் மனை குடியிருப்போருக்கு சதுர அடி கணக்கில் வாடகையைநிர்ணயம் செய்ததை ரத்து செய்து,முந்தைய பகுதி முறையை அமுல்படுத்தி, இதனால் நிலைகுலைந்து போயிருக்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தவேண்டும்,

- பெயர் மாற்றம்,மனை அளவை சரி செய்தல், தவறுதலாக நிர்ணயிக்கப்பட்ட குடியிருப்பு/வணிக வாடகையில் திருத்தம் செய்யவேண்டும்

**37. வழக்கறிஞர் நலன்**

- நீதித்துறை நியமனங்கள் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்துக்கு, மக்கள் தொகை மற்றும் பெண்களின் விகிதாச்சாரத்தில் எஸ்சி, எஸ்டி, ஓபிசி மற்றும் சிறுபான்மையினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க அதிக அழுத்தம் தர வேண்டும்.
- வழக்கறிஞர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ள நிலையில் பார் கவுன்சில் தயாரித்துள்ள வழக்கறிஞர்கள் பாதுகாப்பு மசோதாவை சட்டமாக்கி, செயல்படுத்த வேண்டும்
- சென்னையில் உச்ச நீதிமன்ற கிளையை அமைக்க வேண்டும். தமிழ்நாட்டு தமிழை வழக்காடு மொழியாக ஏற்க வேண்டும
- கீழமை நீதிமன்றங்களில் கட்டாய இ ஃபைலிங் முறையை உரிய கட்டமைப்பு இல்லாமல் செயல்படுத்தக் கூடாது. இ ஃபைலிங் சேவை மையங்கள் தொடங்க வேண்டும்.
- தமிழ்நாட்டில் உள்ள வழக்கறிஞர்கள் உயிரிழக்கும் பட்சத்தில் வழக்கறிஞர்கள் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் சேமநல நிதியை ரூபாய் 25 லட்சமாக உயர்த்த வேண்டும்.

## 38.பாண்டியாறு – மோயாறு இணைப்புத் திட்டம்

- ஈரோடு,கரூர்,திருப்பூர்,கோவை மாவட்டங்களில் லட்சக்கணக்கானோரின் குடிநீர் தேவைகளையும், லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களின் பாசனத் தேவைகளையும் பவானி ஆற்றின் குறைந்து வரும் நீர்ப்பெருக்கை அதிகரிக்க, மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கேரளம் சென்று கடலில் கலக்கும் பாண்டியாறை, மோயாற்றுடன் இணைப்பது, தொழில் நுட்ப ரீதியில் சாத்தியமானதாகவும், செலவு குறைவானதாகவும் உள்ளது.
- இரு மாநில அரசுகளின் பேச்சுவார்த்தை மட்டத்தில் இருக்கும், பாண்டியாறு ~ மோயாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற விரைவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..

## 39. வத்திராயிருப்பு வருசநாடு மலைப்பாதை திட்டம்

- விருதுநகர், தேனி மாவட்டத்தை இணைக்கும் வருசநாடு மலைப்பாதை திட்டம் அமுலாக்குவதன் மூலம் விருதுநகர் தேனி பயண தூரமும், நேரமும் மிச்சமாகும்.
- தேனி, வருசநாடு, புளவந்தல், வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் வழியாக தூத்துக்குடி தொழில் வழிச் சாலையுடன் இணைப்பதன் மூலம் விவசாயம், தொழில் வளர்ச்சி ஏற்படவும், ஏற்றுமதி அதிகரிக்கவும், சுற்றுலா வளர்ச்சி ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன.
- எனவே புலிகள் சர சரணாலயம் என்ற பெயரில் உள்ள தடையை நீக்கி, நீதிமன்ற தடையாணையை ரத்து செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 40. பட்டாசுத் தொழிலைப் பாதுகாத்திட..

- பட்டாசுத் தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் எட்டு லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.
- பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி விதிப்பு காரணமாக உற்பத்தியில் நெருக்கடி ஏற்படுகிறது. கார்ப்பரேட் நிறுவனங்களின் பின்புலத்தில் மாசு ஏற்படுத்தும் தொழில் என்ற கருத்து பரப்பப்படுகிறது.
- உலகத்தரம் வாய்ந்த நூற்றுக்கணக்கான பட்டாசு ரகங்கள், வாண வேடிக்கை பட்டாசுகளை நம்மால் உற்பத்தி செய்ய முடியும்.ஆனால் வெளிநாட்டு ஏற்றுமதியில் பட்டாசுகளின் பங்கு அரை சதம் மட்டுமே உள்ளது. இதனை ஐந்து சதவீதமாக உயர்த்தினால் இன்னும் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்க முடியும்.
- ஏற்றுமதிக்கு வசதியாக விருதுநகர் மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி துறைமுகம் செல்லும் சாலைகளை மேம்படுத்தி, பட்டாசுகளுக்கான தனி சரக்குக் கப்பல்களைப் பயன்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்

**41. 'நடந்தாய் வாழி காவேரி' திட்டம்!**

- *கர்நாடக, தமிழ்நாட்டு ஆலைக்கழிவுகளும், திடக்கழிவுகளும், காவிரியில் கலக்கப்பட்டு, நீர் பெரிதும் மாசு படுத்தப்படுகிறது.*
- *காவிரியை மீட்டெடுக்க 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட, 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும்.*
- *முதல் கட்டமாக மேட்டூரில் இருந்து திருச்சி வரையில் ரூ 1,958 கோடியிலும், பின்னர் கடல் முகத்துவாரம் வரை ரூ 8,753 கோடியிலும் திட்டபணிகளை உயர் முன்னுரிமை தந்து துவக்கவேண்டும்*

- **மதவெறி, பாசிச சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டைப் பாதுகாக்க**
- **தமிழ்நாட்டின் பாரம்பரிய நல்லிணக்கமும், சமூக நீதியும் நிலைபெற**
- **ஒன்றிய அரசின் புறக்கணிப்புகளையும் மீறி உருவாகி வரும் தொழில் வளர்ச்சி இன்னும் மேம்பட**
- **இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைக் கூடுதலாக்க**
- **விவசாயிகள், தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்படாமல் தடுக்க**
- **அரசின் தாக்குதல்களை எதிர்கொண்டு, மாநில உரிமைகளை உறுதிப்படுத்த**

**பாஜக அதிமுக கூட்டணியை நிராகரிப்போம்!**

*வாக்குகளைச் சிதறடித்து, பாஜகவுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட இதர கூட்டணிகள், தனிநபர் கட்சிகளைப் புறக்கணிப்போம்!*

*இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகிக்கும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிப்போம் !*



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர்கள்




**திருத்துறைப்பூண்டி**
சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்
**க.மாரிமுத்து** பி.காம்.



**தளி**
சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்
**டி.ராமச்சந்திரன்** பி.எஸ்சி. எல்.எல்.பி.,



**பவானிசாகர்**
சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்
**பி.எல்.சுந்தரம்**



**திருப்பூர் வடக்கு**
சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்
**ரவி (எ) எம்.சுப்பிரமணியம்**



**திருவில்லிபுத்தூர்**
சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்
**பி.மகாலிங்கம்** எம்.ஏ, பி.எட்.,

மதிமுக